
சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 4	இதழ்: 02	ஜூலை - 2022	விலை - ரூ.15/-
VOL:4	ISSUE: 02	JULY - 2022	Rs. 15/-



யோகி பரமஹம்ச யோகானந்தா..!

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-4 மலர்-2 ஜூலை - 2022

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
செல்வி. Dr.S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.
செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



அன்பு குழந்தையே..!

கர்ம வினைகளை அழிக்க வேண்டும் என்றால் அதை அனுபவித்துத்தான் அழிக்க முடியும். அனுபவிக்க வேண்டும் என்றால் உன் ஒருவனால் மட்டும் அது முடியாது. இன்னொருவர் மூலம் தான் அது நடக்கும்.

அப்படி இருக்கும் தருவாயில் அது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது, உனக்கு ஒருவர் கஷ்டங்களை கொடுத்தால் அவர்களை குறை கூறாதே, அவர்கள் உன் கர்ம வினையை போக்கி உனக்கு கடவுள் கற்றுதர நினைக்கும் வாழ்க்கை பாடத்தை கற்றுத் தருகின்றார் என்பதை நினைவில் கொள்.

எவர் உன் துணை வேண்டும் என்று அன்புடன் உன்னை நோக்கி வருகிறார்களோ, அவர்களுக்கு மட்டும் கருணை உள்ளவனாக இரு, உன்னிடத்தில் உள்ள அன்பை அலட்சியம் செய்தவர்களுக்கு நிச்சயம் உன்னை யார் என்று புரிய வைப்பேன்,

அதற்காக நீயும் அவர்களை அலட்சியப் படுத்தி விடாதே! அமைதி யாக பொறுமையுடன் சகித்துக் கொண்டு இரு, அதற்கான கூலியை நிச்சயம் நான் வழங்குவேன். அதை சரி செய்ய உனக்காக நான் இருக்கிறேன்.. உன் தன்மை என்றும் மாறாது. நீ நீயாக நிம்மதியான சூழ்நிலையில் வாழ வைப்பேன். இது என் வாக்கு.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

சற்குரு சாயிநாதரின் அருளால் நாற்பத்து எட்டாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 05.06.2021 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை-23) நடைபெற்றது.

வழக்கம்போல் காலை ஆறு மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் விழா ஆரம்பித்தது. எட்டு மணிக்கு தியானமும், கூட்டுப்பிரார்த்தனையும், அதைத்தொடந்து, அமிர்தா அட்சயா ஆகியோரின் பஜனை நிகழ்வும் நிகழ்ந்தன.

இம்மாத இதழை தமிழ்நாடு மின்சார வாரியம் அயனாவரம் AE திரு. பாபு அவர்கள் வெளியிட, சாயி சேவரும், ஓவியருமான, திரு. சம்பத் சாய் அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவில், "பாராயணப்பகலவன்" திரு.சுந்தர் சாய், அவர்கள், "சாயி நேசன்" திரு.உமா சங்கர், அவர்கள், "சித்தர் நேசன்" திரு.வெங்கடேசன், அவர்கள் திரு.சுந்தர வடிவேலு, அவர்கள், திரு. அகஸ்டின், அவர்கள்,திரு. பாபு, அவர்கள், திரு.அய்யா கண்ணு, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அயனாவரம் AE திரு. பாபு அவர்கள் சாயி பாபாவைப் பற்றிய அனுபவங்களை பக்தர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

சென்ற மாதத்தில் இருந்து நமது இதழுக்கான காணிக்கையை ரூபாய் பத்தில் இருந்து பதினைந்தாக உயர்த்தியிருந்தோம். பாபா பக்தர்கள் அனைவரும் விலை உயர்விற்கு ஆதரவு அளித்தமைக்கு எமது மனமார்ந்து நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.





இம்மாதம் நமது இதழுக்கு, சென்னை, திருமதி சாந்தி அவர்கள் இரண்டு, மூன்று வருட சந்தா தாரர்களையும், சேலம் விஜயலட்சுமி அவர்கள் நான்கு ஒரு வருட சந்தாதா ரர்களையும், திருச்சி சரவணன் சாய் அவர்கள். இரண்டு ஒரு வருட சந்தாதா ரர்களையும் இணைத்து சாயி சேவை செய் துள்ளனர். அவர்களும், அவர்களது குடும்பத்தினர் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று பகவான் சாயிநாதரின் ஆசியோடு வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறோம்.



பகவான் சாயிநாதரின் புகழ் பரப்பும் இந்த இதழ் உங்களுக்கு பிடித்திருந்தால், இதில் வரும் கருத்துக்கள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று நினைத்தால் நீங்களும் நமது இதழுக்கு சந்தாதாரர்களை இணைத்து இதழ் தொடர்ந்து வெளிவர சாயி சேவையில் இணையும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நமது சாய் மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழ் பகவான்

சாயிநாதரின் பேரருளால் நான்கு ஆண்டுகளை வெற்றிகரமாக கடந்து, அடுத்த இதழ் ஐந்தாவது ஆண்டு விழா மலராக மலரவிருக் கின்றது. அதுசமயம் நமது பகவான் சாயிநாதருக்கு சேவையாற்றிய தொண்டர்களுக்கு, அவர்களது சேவையினைப் பாராட்டி நமது இதழின் சார்பாக விருது அளித்து கவுரவப்படுத்த முடிவு செய் துள்ளோம்.

சாயி பக்தர்கள் அனைவரும் தங்களுக்கு தோன்றும் ஆலோச னைகளையும், தங்களால் இயன்ற காணிக்கையையும் அனுப்பி நீங்களும் சாயி சேவையில் இணைந்து செயலாற்றும்படி வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கின்றோம்.

இதழ் வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

பகவான் சாயிநாதரின் அரு ளால் மிக விரைவில் உலகெங்கும் பரவியிருக்கும் பெருந்தொற்று கட்டுக்குள் வந்து உலக மாந்தர்கள்



அனைவரும் நிம்மதியுடனும், ஆரோக்கி யத்துடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்.

ஆண்டவனின் உதவி!

ஆண்டவனின் உதவி உங்களுக்கு தேவைப்பட்டால் இயல்பாக இருங்கள். அவனிடம் அழும்படி தோன்றினால் அழுது விடுங்கள். உதவிக்காக கதறுங்கள். ஞானிகளின் பிரார்த்தனை எல்லாம் ஆண்டவனின் அருளைக் கோரி கதறியவைகளே!

நீங்கள் உள்ளம் உருக ஒருமுறை ஆண்டவனின் அருளை வேண்டினால்கூட நீங்கள் அவன் அருளை பெறுவது திண்ணம். நீங்கள் அவன் உதவியை உண்மையாக நாடுகின்றீரா இல்லையா என்பதை ஆண்டவன் அறிவான்.

ஆண்டவனின் உதவியை வேண்டும் பொழுது வேறு யாரும் உங்களுக்கு உதவமாட்டார் என்பதை நீங்கள் உணர வேண்டும். ஆண்டவனே கதி! அவனில்லாமல் வேறு யாரும் உங்களை காப்பாற்ற முடியாது என்பதை மனமார உணர்ந்து கதியற்று கிடக்கும் பொழுதுதான் உண்மையான பிரார்த்தனை வரும். அப்பொழுது சிறிதளவு உங்களை நம்பி யிருந்தால்கூட ஆண்டவன் தாமதிப்பான் என்பதை உணருங்கள்.

சீரடி யாத்திரை

சாய் தியானாலயா பிரார்த்தனை மையம் சார்பில் சீரடி புனித யாத்திரை

7 வது யாத்திரை வரும் 13.7.2022 அன்று புறப்படுகின்றது

6 நாட்கள்: *இரயில், பேரூந்து, தங்கும் அறை, தமிழக உணவு உட்பட நபருக்கு ரூ.6000/*

பார்க்கும் இடங்கள்: *சீரடி சாய் மந்திர், கந்தோபா ஆலயம், லெண்டிபார்க், அருங்காட்சியகம்,அனுமன் கோவில் அப்துல்லா காட்டேஜ், லெட்சுமிபாய் வீடு, மகல்சாபதி வீடு, பயாஜி கோதே வீடு, அவுரங்காபாத் எல்லோரா, கிரிஷ்னேஸ்வர் ஜோதிர்லிங்கம் சிவநேசன் சமாதி, சகோரிஉபாசினி மகராஜ், கணபதி கோவில்.*

8 வது யாத்திரை, செப்டம்பர் 21.9.2022 அன்று புறப்படுகின்றது

4 நாட்கள். *இரயில், பேரூந்து, தங்கும் அறை, தமிழக உணவு உட்பட நபருக்கு ரூ.4200/*

பார்க்கும் இடங்கள்: *சீரடி சாய் மந்திர், கந்தோபா ஆலயம், லெண்டிபார்க், அருங்காட்சியகம்,அனுமன் கோவில் அப்துல்லா காட்டேஜ், லெட்சுமிபாய் வீடு, மகல்சாபதி வீடு, பயாஜி கோதே வீடு,சிவநேசன் சமாதி, சகோரி உபாசினி சமாதி, கணபதி கோவில்,*

9 வது யாத்திரை, ஜனவரி 16.01.2023 அன்று புறப்படுகின்றது

6 நாட்கள். *இரயில், பேரூந்து, தங்கும் அறை, தமிழக உணவு உட்பட நபருக்கு ரூ.6500/*

பார்க்கும் இடங்கள்: *சீரடி சாய் மந்திர், கந்தோபா ஆலயம், லெண்டிபார்க், அருங்காட்சியகம்,அனுமன் கோவில் அப்துல்லா காட்டேஜ், லெட்சுமிபாய் வீடு, மகல்சாபதி வீடு, பயாஜி கோதே வீடு, நாசிக் திரியகம்பேஸ்வர், பஞ்சவடி, சீதா குகை, காலாராம், சிவநேசன் சமாதி, சகோரி, கணபதி கோவில்.*

ஆறு நாட்கள் குரு ஸ்ரீராம் சாய் அவர்களுடன் சத்சங்கம், தியானம், யோகாவுடன் ஓர் ஆனந்த பயண அனுபவம்.

விபரங்களுக்கு: **சாய் தியானாலயா**

9941816692, 88258 31068

குரு காணிக்கை – ஆசிரியர்



25 வருடங்களுக்கு முன்பாக எமக்கு குண்டலினி தீட்சை அளித்த என் குரு ஸ்ரீ நாகராஜாவின் நினைவாக அவருக்கு ஓர் சிலை அமைக்க வேண்டும் என்ற எமது விருப்பத்தை குரு அவர்கள் மறுத்து விட்டார்கள்.

கடந்த பத்து ஆண்டுகளாக எமது தொந்தரவு தாங்க முடியாமல், முதன்முதலில் அவர் எந்த ரூபத்தில் எமக்கு காட்சியளித்தாரோ அந்த ரூபத்திற்கு சிலை வைத்துக் கொள்ள அனுமதியளித்தார்.

எமது குரு ஸ்ரீ நாகராஜா அவர்கள் எமக்கு முதலில் ஐந்து தலை நாகமாகத்தான் காட்சி கொடுத்தார். எனவே எமது குருவின் நினைவாக ஐந்து தலை நாகர் சிலையையே வடித்து பிரதிஷ்டை செய்து விடலாம் என்று முடிவு செய்தோம்.

சிலை செய்வதற்காக கடந்த எட்டு ஆண்டுகளாக மாமல்லபுரத்தில் இருந்து மதுரை வரை தேடுதலில் அகப்படாத சிலை இறுதியாக கடந்த ஏப்ரல் மாதம் ஒரு நண்பரின் வழிகாட்டுதலில்

மூலமாக ஒட்டன் சத்திரம் சென்று ஒருவழியாக சிலையை செய்து முடித்தோம்.

யாம் பிறந்த ஊரும், எமக்கு குண்டலினி தீட்சை கிடைத்த ஊரும் ஒன்றே! திண்டுக்கல் மாவட்டம் அம்மையநாயக்கனூர் என்ற ஊரில் சிலையை கொண்டுவந்து சேர்த்து 48 நாட்கள் சாஸ்திர சம்பிரதாயங்கள் செய்து முறைப்படி ஸ்ரீ நாகராஜா பிரதிஷ்டை கடந்த 12.6.22 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மிகச்சிறப்பாக நடந்தேறியது.

முறைப்படி சிலை பிரதிஷ்டை செய்ய வேத பிராமணர்கள் கிடைக் காததால் சற்றே மனம் சங்கடப்பட்டது. நமக்கு பகவான் சாயிநாதரை விட் டால் வேறு கதி! பகவானிடம் முறை யிட்டேன். சற்றுநேரம் தான். சேலத்தில் இருந்து சகோதரி பிரதீபா அவர்கள் ஒரு சகோதரனுக்காக பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று கூற, நான் பெயரும் ஊரும் கேட்க, அவரோ, உமா மகேஸ்வரன், நிலக்கோட்டை என்று கூற எனக்கோ ஆச்சர்யம்.

நிலக்கோட்டை என்ற ஊர் எங்கள் ஊரில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரம்தான். அவரிடம் உதவி கேட்டால் என்ன? என யோசித்துக் கொண்டே ஒரு மாதத்தை கடத்தி விட்டேன்.

இங்கு பகவான் சாயிநாதரின் லீலையைப் பாருங்கள். நான் சென்னையில் இருக்கின்றேன். சகோ தரியோ சேலத்தில் இருக்கின்றார்கள். சகோதரர் உமேஷ் நிலக்கோட்டையில் இருக்கிறார். எப்படி தொடர்புகளை ஏற்படுத்தி ஆன்மீக வேலைகளை நடத்திக் கொள்கின்றார்கள் பாருங்கள்.

பிறகு ஒரு நாள் காலையில் தவத்தின்போது, உனது வேலைக்காக நான் அனுப்பியவன்தான் உமேஷ் அவனிடம் உதவி கேட்க எது உன்னை தடுக்கின்றது. உனக்கு உதவி செய்வதன் மூலம் அவனது கர்மாவை தீர்க்க முயலுகின்றேன். நீயோ அசால்டாக இருக்கின்றாயே. உடனே அவனை தொடர்பு கொள் என்று பகவான் என்னை அர்ச்சித்தார்.

உடனே அவரை தொலுபேசியில் தொடர்பு கொண்டு உதவி கேட்ட தும்தான் தாமதம், என்ன இப்படி கேட்டு விட்டீர்கள், இது என் பாக்கியம் சாய்ராம் என்று, எனக்கு பாபாவால் அனுப்பப்பட்ட அன்புச் சகோதரன் திரு. உமேஷ் அவர்கள் எமது வேலையை தமது வேலையாக எடுத்து அனைத்தையும் ஏற்பாடு செய்து சிலை பிரதிஷ்டையை மிகச் சிறப்பாக செய்து கொடுத்தார். அதுமட்டுமல்லாது





எம்மையும், எமது குடும்பத்தாரையும் தமது இல்லத்திற்கு அழைத்து சிறப்பான மதிய உணவளித்து மகிழ்ந்தார்.

அவருக்கும், அவரது குடும்பத்தார் அனைவருக்கும் பகவான் சாயி நாதரின் அனுகிரத்தால் தடைபட்ட காரியங்கள் எல்லாம் நிறைவேறி எல்லா நலன்களும் பெற்று வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறோம்.

சிலை வைப்பதற்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்புக் கொடுத்த நண்பர் கோவை.திரு. கார்த்திகேயன் அவர்களுக்கும். திரு. அசோக் குமார் அவர்களுக்கும், குண்டல மல்லீஸ்வரர் சீவ சமாதி ஆலய அறங்காவலர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தார் அனைவருக்கும் பகவான் சாயி பாபாவின் ஆசிகள் கிட்ட பிரார்த்திக்கின்றேன்.

குரு வாழ்க! குருவே துணை!

அன்பு தரும் ஆரோக்கியம்.

ஆசைகள் அதிகமாகிவிட்டதால் மக்களின் ஆட்டங்களும் அதிகமாகி விட்டன. உடலாலும் மனத்தாலும், ஓயாத அலைச்சல்களில் தேவையில்லாத சுமைகளை தூக்கி வைத்துக் கொண்டு வாழ்கிறார்கள். புகைபிடிப்பது, மதுபானம், நெடுநேரம் வரிசையில் நின்று இறுக்கமாக கும்மிருட்டில் அமர்ந்து மனத்தை கெடுத்துக் குட்டிச்சுவராக்கும் சினிமாக்களை பார்ப்பது, பண வேட்டையில் பறப்பது.

அரசியலில் உணர்ச்சிவசப்பட்டு தொண்டையையும் நரம்பையும் சக்தி விரயம் செய்து நலிவித்துக் கொள்வது.நாகரிகம் என்று நினைத்துக் கொண்டு கூடை போல் முடி.கசகசப்பு உடை என திரிவது. கண்ட இடத்தில் கண்ட வேளையில் கண்டத்தைத் தின்பது.எதிலும் ஒரு ஒழுக்கம் இல்லாமல் ஒரே டென்ஷன் மயமாக்கிக் கொண்டிருப்பது.

ஆகியவற்றால்தான் இப்போது இதயநோய் , ரத்த அழுத்தம், டி.பி, ஈஸினோஃபிலீயா, புற்று நோய் எல்லாம் அதிகமாகியிருக்கின்றன. *நிம்மதியாக, லேசாக எளிய வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தால் முக்கால்வாசி வியாதி வரவே வராது! எல்லாவற்றையும் விட அகங்காரம் இல்லாமல் அதனால் ஏற்படும் விரோதமும் விவாதமும் இல்லாமல் அன்பாக இருக்கப் பழக்கிக் கொண்டால் அந்த அன்பு தரும் ஆனந்தமே மகத்தான ஆரோக்கியமும் தரும்!

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

மிகவும் கடுமையான கலியின் களியாட்டத்தில் பலவிதமான இயற்கை சீற்றங் களினால் அல்லல்படும் நம் அனைவருக்கும் கலியுகத் தின் முதல் தத்த அவதாரியும் ஸ்ரீ ஷீரடி சாயிபாபா உருவில் என்றென்றும் நம்மை காத்து அருள்புரியும் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அருளிச்செய்த இந்த மாமந்திரத்தை அனுதினமும் ஜபம் செய்து முழுமையான பாதுகாப்பு வளையத்தில் நாம் திகழ்ந்திட...



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ர தத்தாத்ரேயா திகம்பரா"!

– என்ற நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மந்திரத்தை ஜபம் செய்ய வேண்டுகிறோம்.

இம்மந்திரத்தை தினமும் 108 முறை ஜபம் செய்ய வாய்வு மண்டலத்தில் உள்ள எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து நம் அனைவருக்கும் பாதுகாப்பு கிட்டும் என்பது அனுபவப்பூர்வமான உண்மை.

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு: சுந்தர்சாய், 9789404451

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

– ஜெயந்தி ஸ்ரீராம்

லீலை: 10. அன்னதானம் ஆரம்பித்தது...

குருவினுடைய வாக்குப்படி, கர்மா எப்பொழுது தீர்ந்தது. எப்படி அன்னதானம் ஆரம்பிக்கப்பட்டது என்பதைப் பற்றி அடுத்த மாதம் எழுதுகிறேன்.

வெகுநாட்களாக நகரின் தொழில் அதிபர் ஒருவர் குருவிடம் நான் இடம், பொருள் அனைத்தும் தருகின்றேன். நீங்கள் அன்னதானம் செய்யுங்கள் என்று கூறிக்கொண்டே இருந்தார். அவரிடமும் குரு, எதை செய்தாலும் தொடர்ந்து செய்ய வேண்டும். நீங்கள் மட்டும் கொடுத்து, நான் செய்வது என்றால் ஏதாவது ஒரு காலகட்டத்தில் கண்டிப்பாக நின்றுவிடும். அதற்கென்று ஒரு காலம் வரும்போது பாபாவே ஆரம்பித்து வைப்பார் என்று கூறி விட்டார்.

அதற்குண்டான காலமும் வந்தது. ஆம் குரு பாபாவின் புகழைப் பரப்பும் விதமாக ஒரு புத்தகம் ஆரம்பித்தார். (அதுவும் பாபாவாலேயே ஆரம் பிக்கப்பட்டது. அது எப்படி என்பது பற்றி பின்பு எழுதுகின்றேன்) அதுதான் நமது சாயி மகராஜ் குருவை தேடி என்ற மாத இதழ்.

இதழின் முதல் வெளியீட்டு விழாவில் வருகின்ற பக்தர்களுக்கு உணவளிக்க வேண்டும் என்பதற்காக, உணவு தயாரித்து வழங்கும் ஒருவரிடம்



நூறு பேருக்கு உணவு தயாரிக்கக் கூறியிருந்தார் குரு.

உணவு தயாரிப்பவர் நமது குருவிடம் யோகப் பயிற்சி பெற்ற திரு. செல்வராஜ் என்ற மாணவர். அவர் தன் குருவின் மீதுள்ள அன்பால் நூறு பேருக்கு பணம் வாங்கிக்கொண்டு அதற்குப் பதில் இருநூறு பேருக்குண்டான உணவு தயார் செய்து கொடுத்து விட்டார்.

முதல் இதழ் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது. வந்திருந்த நூற்றுக்கு மேற்பட்ட பக்தர்கள் உணவு அருந்தியும் இன்னும் நூறு பேருக்குண்டாண உணவு மிச்சமிருந்தது. அன்று

ஞாயிற்றுக் கிழமை. மதியம் மணி இரண்டை நெருக்கிக் கொண்டிருந்தது. மே மாத வெயிலும் கடுமையாக அனலை வீசிக்கொண்டிருந்தது.

மீதம் உள்ள உணவைப் பார்த்ததும் இந்த உணவை என்ன செய்வது. மணி வேறு இரண்டை கடந்து விட்டது. சாப்பிடும் நேரம் கடந்தபின்பு இதை யார் வாங்குவார்கள். நூறு பேருக்கு செய்யச் சொன்னால் நூறு பேருக்கு மட்டும் செய்ய வேண்டியதுதானே! இப்போது இந்த உணவை யாருக்கு கொடுப்பது. நாங்கள் இதற்கு முன்பு அன்னதானம் செய்து பழக்க மில்லையே என்றவாறே குரு அவர்கள் யோசிக்கத் தொடங்கிவிட்டார்.



பின்பு அவரே, சரி உணவை எடுத்துக் கொண்டு கீழே ரோட்டில் வையுங்கள். நான் பேப்பர் தட்டு வாங்கி வருகின்றேன். கேட்பவருக்கு கொடுப்போம் என்று கூறிவிட்டு தட்டு வாங்க கடைக்குச் சென்றார். அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் கடைகள் விடுமுறையாதலால் தட்டு வாங்கிவர காலதாமதமாகி மணி மதியம் 2.30. ஆகிவிட்டது.

தட்டு வாங்கிவந்த குரு, யார் கேட்டாலும் உணவை கொடுத்து காலி செய்து விடுங்கள். உணவை விரயம் ஆக்கிவிடாதீர்கள் என்று கூறிவிட்டு மாடிக்குச் சென்று விட்டார்.

அப்போது நமது "சாய் தியானாலயா" அயனாவரம் வில்லிவாக்கம் மெயின் ரோட்டில் ஒரு மாடியில் இயங்கிக் கொண்டிருந்தது.நாங்களும் நான்கு அண்டாக்களில் உணவை எடுத்துக் கொண்டு கீழே ரோட்டில் வைத்துக் கொண்டு நிற்கின்றோம். யாருக்கும் அன்னதானம் செய்து பழக்கமில்லை என்பதால் சற்று சங்கோஜத்துடன் நிற்கின்றோம்.

ஆண்கள், பெண்கள் என்று நாங்கள் பத்து பேர் உணவு அண்டாக் களுடன் தயாராக நிற்கின்றோம். கடுமையான வெயில் காரணமாக ரோட்டில் நடமாட்டமே இல்லை. எங்கள் குழுவில் இருந்த ஆண்கள் கண்களில்பட்ட ஓரிரண்டு நபர் களை சாப்பிட அழைத்தாலும், அவர்களும் நாங்கள் சாப்பிட்டு விட்டோம். வேண்டாம் என்று கூறிச் சென்றுவிடுகின்றனர்.

எங்களுக்கோ தர்மசங்கடமான நிலை.

ஏற்கனவே அன்னதானம் என்றால் குரு ஆயிரம் விளக்கம் கூறுவார்.நாம் சாப்பிடாமல் நமது உணவை பசித்தவர்களுக்குத் தருவதே அன்னதானம். அதையும் நேரத்தோடு தந்துவிடவேண்டும். பசி இல்லாதபோது உணவு கொடுத்து புண்ணியமில்லை என்பார்.

இன்றோ, நாங்கள் வயிறு நிறைய உண்டுவிட்டு, அன்னதானம் செய்ய நிற்கின்றோம் அதுவும் நேரம் கடந்து, இருந்தாலும், மக்கள் வந்து உணவை வாங்கிச் சென்று விட்டால் உணவு வீணாகாது. உணவு வீணாகிவிட்டால் குரு கோபப்படுவார். குருவுக்கு கோபம் வந்தால் அதையே சாக்காக வைத்து நாள்கணக்கில் மவுனமாக இருந்துவிடுவார். எனது மனது வேறு குழம்பித்தவிக்கின்றது.

மனதிற்குள் சாய் தேவா! இது என்ன சோதனை. இதற்கு ஒரு வழி காட்டக் கூடாதா? என்று மனதிற்குள் பிரார்த்திக்கின்றேன். மணி மதியம் மூன்று. அந்த 100 அடி சாலை முழுவதும் ஒரு மனிதனைக் கூட காணோம். நேரம் ஆகிவிட்டது. இனிமேல் யாரும் வரமாட்டார்கள். அருகில் ஏதாவது ஆதரவற்றவர்களின் இல்லம் இருந்தால் கொடுத்து விடாலாம் என்று ஒரு சகோதரி யோசனை கூறினாள்.

அதுவும் நல்ல யோசனைதான் ஆனால் இப்போது எங்கு போய் ஆதரவற்றவர்களின் இல்லத்தை தேடுவது. என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது தூரத்தில் ஒரு வயதான பெரியவர் வந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும், சகோதரர் கார்த்திக் என்பவர். அவரிடம் ஓடிப்போய் அவரைபார்த்து அய்யா சாப்பிடுகின்றீர்களா வாருங்கள் என்று அழைத்து வந்தார். அவரும் ஏதும் கூறாமல் சகோதரனின் பின்னால் நடந்து வந்தார்.

கிழிந்து அழுக்கான உடையணிந்து பலகாலமாய் குளிக்காத தோற்றத்தோடு பரட்டை தலை, நீண்ட தாடியோடு, ஆறடி உயரத்தில், காலில் செருப்பு இல்லாமல், வெயிலில் நடந்து வந்து எங்களின் முன்னால் நின்றார்.

அப்பாடா ஒரு பிச்சைக்காரராவது வந்தாரே என்று நாங்கள் அனைவரும் பரபரப்பாக ஒருவர் தட்டெடுக்க,ஒருவர் சாதம் வைக்க, ஒருவர் இனிப்பு வைக்க என தட்டை நிரப்ப, சகோதரர் கார்த்திக் அதை வாங்கி அவரிடம் நீட்டுகின்றார்.

ஆனால் அவரோ சாப்பாட்டுத் தட்டை கையில் வாங்காமல் எங்களையும், சாப்பாட்டு அண்டாக் களையும், வெறித்துப் பார்க்கின்றார். சிவந்த நிறம், பூனைக் கண்கள், நீளமான மூக்கு, கறைபடிந்த பற்கள், முழங்காலுக்கு கீழே தொங்கும் கைகள். என்ன நினைத்தாரோ தெரியவில்லை. சட்டென்று சாப்பாட்டுத் தட்டை கைகளில் வாங்கியவர், தட்டில் உள்ள உணவுகளை ஒன்றாக அள்ளி வாயில் போட்டார்.

நாங்கள் அத்தனை பேரும் அவரையே பார்த்துக் கொண்டி ருக்கின்றோம். மூன்றே முறை அவர் தட்டில் இருக்கும் உணவை கைகளில் அள்ளி வாயில் போடுகின்றார். அவர் வாயில் போடுவதற்கு முன்பாக அவருடைய நாக்கு வாயிலிருந்து வெளிவந்து அவரின் கைகளில்



இருக்கும் உணவை லாவகமாக சுருட்டி உள்வாங்கிக் கொள்கின்றது. அவரது நாக்கு, வாயில் இருந்து அரை அடி நீளத்திற்கு வெளியில் வருவதைப் பார்த்த நாங்கள் அதிசயத்துப் போய் அவரையே பார்க்க, மாடியில் இருந்து ஒரு குரல் எங்கள் கவனத்தை கலைக்கின்றது.

கூட்டம் நிற்கின்றது, சாப்பாடு போடாமல் என்னப்பா பண்றீங்க என்று குருதான் குரல் கொடுக்கின்றார். அப்போதுதான் நாங்கள் பார்க்கின்றோம். எங்கிருந்துதான் அவ்வளவு கூட்டம் வந்தார்களோ தெரியவில்லை. நூற்றுக்கண்க்கான நபர்கள் எங்களை மொய்த்து எடுத்து விட்டார்கள். அடுத்த பத்து நிமிடத்தில் அண்டாக்கள் காலியாயின. ஆனால் அந்த வயதான பக்கிரியை அதற்குப் பின்னால் நாங்கள் கவனிக்கத் தவறிவிட்டோம். பகவானே! சாயிலீலை என்பது இதுதானோ!

தட்டுகளில் சாப்பாட்டை எடுத்துப் போடப் போட, எங்களுக்கு அப்படி ஒரு ஆனந்தம். அந்த ஆனந்தம் "கொடுத்துப் பார்த்தால்தான்" தெரியும். அந்த நாளில் அன்னதானத்தின் பெருமையை நாங்கள் உணர்ந்தோம். ஆனால் அதை குருவிடம் ஒருவரும் கூறவில்லை.

மறுநாள் காலையில் குருவினுடைய ஆத்ம நண்பர் சென்னை பட்டாளத்தை சேர்ந்த திரு. செந்தில்குமார் என்பவர் குருவுடன் உரையாடும்போது அவருடைய சகோதரரின் திருமணத்தைப் பற்றி பேச்சு வந்தது

திருமணத்தில் வழங்கப்படும் விலை உயர்ந்த உணவுகள் வீணடிக்கப் படுவதைப் பற்றி பேசி வருத்தப்பட்டார். திரு.செந்தில் அவர்கள். அதற்கு குரு அவர்கள் அன்னத்தின் பெருமைகளைப் பற்றி கூறி அதை விரயம் செய்யக்கூடாது. திருமணத்தில் உணவு மிச்சமானால் நீங்களாவது அதை கவனத்துடன், திருமணம் முடிந்ததும் அருகில் இருக்கும் ஆதரவற்ற இல்லங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யுங்கள்.

அதுமட்டுமின்றி அவர்கள் உணவு

உண்ணும் வரை அவர்களுடன் இருந்து பரிமாறிவிட்டு வாருங்கள். அவர்கள் உணவை உன்பதற்கும், விசேசங்களில் நமது உறவினர்கள் உணவை உன்பதற்கும் உள்ள வித்தியாசத்தை உணர்வீர்கள் என்று கூற. அவரும் கண்டிப்பாக செய்கிறேன் என்று கூறிச் சென்றார்.

திருமணம் முடிந்த மறுநாளே வந்தவர் திருமணத்தில் நிறைய உணவுகள் மிச்சமாகிவிட்டன.நீங்கள் கூறியபடியே ஏற்கனவே அருகில் இருந்த முதியோர் இல்லத்தை தொடர்பு கொண்டு வைத்திருந்தேன். உணவு மிச்சமானதும் அவர்களுக்கு எடுத்துச் சென்று வழங்கினோம்.அவர்கள் அந்த உணவை அவ்வளவு ஆர்வமாக உண்டார்கள். எங்கள் உறவினர்கள் உண்டபோது மனம் ஆனந்தப்பட்டது. ஆனால் இவர்கள் உண்டபோதுதான் எங்கள் ஆத்மா ஆனந்தப்பட்டது. எங்களுக்கும் உணவு விரயம் ஆக வில்லை என்ற திருப்தி கிட்டியது என்றார்.

பிறகு பேச்சுவாக்கில் யார் யாரோ அன்னதானம் என்ற பெயரில் பணத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வளவு கூறும் நீங்கள் ஏன் அன்னதானம். செய்யக்கூடாது என்றார்.

குரு உடனே, செய்யலாம். ஆரம்பித்துவிட்டால் தொடர்ந்து செய்ய வேண்டும். அதற்குண்டான பொருளாதாரத்திற்கு வழி செய்ய வேண்டுமே! அதுதான் யோசிக்கிறேன் என்றார்.

திரு.செந்தில் அவர்கள் உடனே, நீங்கள் பாபாவின் காலடியில் அன்ன தான உண்டியல் என்று ஓர் உண்டியல் வையுங்கள். முதல் தொகையை அதில் நானே இடுகின்றேன். என்று கூற குருவும் மறுநாளே ஒரு உண்டியல் வாங்கி அன்னதான உண்டியல் என்ற எழுதி பாபாவிடம் வைத்துவிட்டார்.

எனக்கோ ஆச்சர்யம். ஏன் என்றால் அதுவரை எங்கள் சபையில் உண்டியல் இல்லை. குருவும் அதுவரை யாரிடமும் பணம் கேட்டதில்லை. சொன்னது போலவே திரு.செந்தில் அவர்கள் முதல் நபராக ஒரு தொகையாக உண்டியில் செலுத்தினார். அவரிடம் குரு, சரி உங்களின் விருப்பப்படியே அன்னதானம் செய்கிறேன்.ஆனால் ஒரு நிபந்தனை. நமது சபையில் அன்னதானம் செய்யவேண்டாம். சமைத்து எடுத்துக் கொண்டு பசியோடு இருப்பவர்களை தேடிச்சென்று கொடுக்கலாம் என்று நினைக்கின்றேன் என்றார்.

அது சற்று சிரமமானது அல்லவா என்றார் செந்தில். இல்லை. சமைத்து பார்சல் கட்டி கொடுப்பதற்கு நமது சபைக்கு வருபவர்கள் இருக்கின்றார்கள். எடுத்துச் செல்வ தற்கு நான் இருக்கின்றேன். என் னிடம் இரண்டு சக்ர வாகனம் இருக் கின்றது. ஆகவே உடனடியாக ஆரம்பித்துவிடவேண்டியதுதான் என்றார்.

நானும், மற்ற உறுப்பினர்களும், இன்னும் கொஞ்ச காலம் போகட்டும் உண்டியலில் சற்று பொருளாதாரம் வந்ததும்,சமைப்பதற்கு முக்கியமாக பாத்திரமும், அடுப்பும் வாங்கிக் கொண்டு ஆரம்பிக்கலாம் என்றோம்.

ஆனால் குருவோ, இல்லை, இல்லை அன்னதானத்திற்கென்று ஒரு தொகை வந்து விட்டது. அதை கையில் இருப்பு வைக்கக் கூடாது. உடனடியாக அன்னதானத்திற்கு

செலவு செய்து விட வேண்டும். தவிர எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு ஆரம்பிக்கலாம் என்றால் நாட்கள் போய்கொண்டே இருக்குமே தவிர காரியம் ஆகாது. இருப்பதை வைத்துக் கொண்டு என்ன முடியுமோ அதை செய்ய ஆரம்பித்துவிட்டால் பின்பு எல்லாம் கைகூடி வந்து விடும் எனவே,

நாளை வியாழக்கிழமை. நாளையில் இருந்து வியாழக்கிழமை தோறும் அன்னதானம் நடக்கும் என்று கூற,

நானும், சபைக்கு வரும் சில சகோதரிகளும், அவசரப்பட வேண்டாம். என்று எவ்வளவோ எடுத்துக் கூறியும், கையில் இருக்கும் தொகையைக் கொண்டு, நம்மிடம் இருக்கும் பாத்திரங்களைக் கொண்டும் என்ன செய்யமுடியுமோ அதை செய்து தாருங்கள். நான் சென்று கொடுத்து வருகின்றேன். என்று முடிவாகக் கூறிவிட்டார்.

உடனே அனைவரும் அதற் குண்டான ஏற்பாடுகளை செய் தோம். தெரிந்த சகோதரிகளின் வீடுகளில் இருக்கும் பெரிய பாத்தி ரங்களை கொண்டுவந்து எங்களால் முடிந்த அளவிற்கு உணவு சமைத்து உணவுப் பொட்டலங்களைப் தயார் செய்தோம். மொத்தம் 48 பொட்டலங்கள் வந்தது.

குரு அவர்கள் தனது இரண்டு சக்ர வாகனத்திலேயே எடுத்துச் சென்று விநியோகித்து வந்தார். எனினும் எடுத்துச் சென்ற பொட்டலங்கள் தீர்ந்தும் கூட நிறைய நபர்கள் உணவிற்காக காத்திருந்ததாகவும் அவர்களுக்கு கொடுக்க முடியாமல் போனதற்காக வருத்தப்பட்டார். அதன் பின்பு அவரே அடுத்த வாரம் வியாழன் அன்று நாம் 100 பேருக்காவது அன்னதானம் செய்ய வேண்டும் என்று கூறி அதற்கு தேவையானது என்ன என்று கேட்டார்.

முதலில் தேவையானது 100 பேருக்கு சமைக்கக்கூடிய பாத்திரங் களும். அடுப்பும்தான் என்று நான் கூற, சரி அதற்கு முதலில் ஏற்பாடு செய்வோம்

என்று குரு அவர்கள் கடைக்குச் சென்று அடுப்பும், பாத்திரங்களும் எவ்வளவு ஆகும் என்று விசாரித்து வருகின்றேன் என்று கூறிச் சென்றார்.

கடைத் தெருவிற்குச் சென்றவர் விசாரித்துப் பார்த்ததில் அடுப்பும், பாத்திரங்களும் பதினைந்தாயிரம் ரூபாய் வரை ஆகும் என்றவுடன் திகைத்து போய், இவ்வளவு ருபாய்க்கு எங்குபோவது, என்றவாறே பாத்திரக்கடையின் வாசலில் நின்று சற்று நேரம் கடையையே பார்த்துக் கொண்டு நின்றிருக்கின்றார்.

இவை எல்லாம் சாத்தியமா, அப்படியே பொருட்கள் வாங்கிவிட் டாலும் எரிபொருளுக்கு என்ன செய்வது. அதற்கடுத்து மளிகைப் பொருட்கள், அரிசி இருக் கின்றது. என்றவாறே சற்றே வருத்தத் துடன் அங்கிருந்து புறப்பட எத்தனித் திருக்கின்றார்.

அப்போது அவ்வளவுதானா, புறப்பட்டாச்சா, என்று ஒரு குரல் குருவை நோக்கி வந்திருக்கின்றது. சட்டென்று திரும்பிப் பார்க்க, அங்கே முதன்முதலில் இடம், பொருள் அனைத்தும் கொடுத்து அன்னதானம் செய்யச் சொன்னாரே ஒரு தொழில் அதிபர் அவர் நின்றிருக்கின்றார்.

– லீலைகள் தொடரும்...

தொடர் –48

குருவைத் தேடி

எனவே உலகத்தின் புற இன்பங்களையும், துன்பங்களையும் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் நடக்கும் நிகழ்வுகளில் கவனம் செலுத்தவும். இன்னும் ஓராண்டில் நீங்கள் உங்களது பூர்வீகத்தை நோக்கி இடம் பெயர்வீர்கள். நன்மையே நடக்கும் நான் வருகின்றேன். என்று மறைந்தார் நடேசன்.

நான் ஒருவாறு சமாதானம் ஆகி வீட்டை நேக்கி நடந்தேன். அடுத்து வந்த ஒரு மாதத்தில் சில வியாபார வாய்புகள் என் பொருளாதார தேவையை சிறிது நிறைவு செய்தது. தொடர்ந்து மூன்று, நான்கு ஆண்டுகளாக நடைபெற்றுவரும் லெகீக வாழ்க்கை எனக்கு சலிப்பைத் தந்தது. ஆன்மீக தொடர்பே இல்லாதது போல் உணர ஆரம்பித்தேன்.

அன்று கார்த்திகை ஐந்தாம் தேதி. எப்பொழுதும் கார்த்திகை ஒன்றாம் தேதியே மாலை போட்டுவிடுவேன் கடந்த பத்தாண்டுகளாக அதை பழக்கத்தில் வைத்திருந்தேன். இந்தாண்டு ஏனோ குடும்பச் சூழ்நிலை காரணமாக மாலை போட வேண்டும் என்ற ஆசை இருந்தாலும் நாட்கள் தள்ளிப் போய் கொண்டே இருந்தது.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக கார்த்திகை பிறந்துவிட்டாலே தெருவெங்கும் பக்தி மணம் கமழும். தெருவிற்கு குறைந்தது முப்பது நாற்பது சாமிகளாவது மாலை போட்டிருப்பார்கள்.காலையில் நான்கு மணிக்கெல்லாம் காவிரிக்கரை விழித்துக் கொள்ளும். அதிகாலை வேளை காவிரியில் ஓடும் குளிர்ந்த நீரில் சுவாமியே சரணம் அய்யப்பா என்ற சரண கோசத்துடன் மூழ்கி எழுதல் சுகானுபவம்.

அனைத்து ஆலயங்களிலும் அய்யப்பனின் ஆனந்த காணங்கள் ஒலிக்கும் இனிய சங்கீதங்கள் காற்றோடு கலந்து காதுகளை குளிர்விக்கும். தெய்வீகப் பாடல்கள் எதுவாக இருந்தாலும் மனதிற்குப் பிடிக்கின்ற ராகமாகவே இருக்கின்றனவே எப்படி என்று மனம் ஆராய்ச்சி செய்யும். காலையில் வீசும் கார்த்திகை மாதக் குளிர் காற்றும், அதோடு இழைந்து வரும் இசைக் கீற்றும் மனதை மயக்கி மாயங்கள் செய்யும்.

பெருத்த சரண கோசங்களுடன் சுவாமிகள் குளிப்பதும், சந்தனம் குங்கும அலங்காரங்கள் செய்து கொண்டு வீதி வழியே கூட்டம் கூட்டமாக ஆலயங்களுக்குச் செல்வதும் கோலாகலமாக இருக்கும்.

எதிரே வருபவர் தெரியாதவராக இருந்தாலும் அவர் மாலை போட்டிருந்தால் அவரைப் பார்த்து கைகூப்பி வணக்கம் சொல்லி சுவாமி சரணம் கூறுவது சமத்துவத்தை போதிக்கும். கடவுள் நம்பிக்கை அற்றவர்களுக்கு கூட நாமும் ஏன் இம்மாதிரி ஆனந்தமாக இருக்கக்கூடாது

என்ற ஆசை வரும்.

இந்தவருடம் என்னால் சபரிமலைக்குச் செல்லமுடியுமா என்ற ஏக்கத்துடனும், சந்தேகத்துடனும் சைக்கிளை எடுத்துக் கொண்டு குடந்தை மவுனகுரு தட்சிணாமூர்த்தி சுவாமிகளின் சமாதிக்குச் சென்று தவத்தில் ஆழ்ந்தேன்.

வெகுநேரம் தவத்தில் இருந்து கண்விழித்துப் பார்க்கின்றேன். என் முன்னால் புதிய காவித்துண்டு ஒன்றும், துளசி மணிமாலை ஒன்றும் இருந்தது. யாருடையதாக இருக்கும் என்று நான் அதையே பார்த்தேன்.


குடந்தை மவுனசுவாமிகள்

அந்த நேரத்தில் அங்கு வந்த பூசாரி என்ன சாமி மாலை போடணுமா? என்றவாறே மாலையை மட்டும் எடுத்துச் சென்று சுவாமியிடம் வைத்து தீபாரதனை காட்டி எடுத்துவந்தவர் என் பதிலைகூட எதிர்பார்க்காமல் என் கழுத்தில் போட்டுவிட்டு,விடுவிடு வென்று நடந்து மடத்திற்கு வெளியே போய்விட்டார்.

மனம் ஆனந்தக் கூத்தாடியது. துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு சுவாமியை வீழ்ந்து வணங்கினேன். மனதிற்குள் மணிகண்டனுக்கு நன்றி கூறினேன். இந்தவருடமும் மகான் மணிகண்டனை பார்க்கப் போகிறோம் என்ற ஆனந்தத்துடன் வீட்டிற்கு வந்தேன்.

எப்படியோ எல்லாவற்றையும் ஒருவாறாக சமாளித்து மலைக்குப் புறப்பட்டுவிட்டேன். வழக்கம் போல் தனியாளாக புறப்பட்டேன். எரிமேலியில் இருந்து பெரும்பாதையில் பயணம் செய்து முதல்நாள் இரவு முக்குழி என்ற இடத்தை அடைந்து அங்கேயே தங்கினேன்.

மறுநாள் காலையில் மூன்று மணிக்கெல்லாம் எழுந்து நடக்க ஆரம்பித்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் எனக்கு முன்னே ஓர் வயதான சுவாமிகள் நடப்பதைக் கண்டேன். நான் அவரை தாண்டி நடக்க முற்படுகையில், என்ன சுவாமி அவ்வளவு அவசரமா? என்றார் நான் அவரை திரும்பிப்பார்த்தேன். எங்கோ பார்த்ததாய் நினைவு, பெரிய பாதையில் நடக்கையில் நான் மவுன விரதம் விருப்பது எனது பழக்கம். எனவே நான் பேசாமல் நடந்தேன்.

உங்கள் சற்குரு யார் என்று தெரிஞ் சுக்க வேணாமா? என்று மீண்டும் பெரியவரிடம் இருந்து குரல் வந்தது. நான் சட்டென்று திரும்பி பெரியவரைப் பார்த்தேன். சொல்லுங்க தம்பி தெரிஞ்சுக்கனுமா, வேணாமா? என்று மீண்டும் கேட்டார். நான் திரும்பி வந்து பெரியவருக்கு வணக்கம் வைத்தேன்.

பெரியவர் என்னைப் பார்த்து

புன்னகைத்து தெரிஞ்சுக்கனும்தானே! அப்படின்னா இந்தா என் ஜோல்னா பையை கரிமலை வரைக்கு தூக்கிட்டுவா என்று என்னிடம் ஜோல்னாபையை நீட்டினார்.

நான் அதை பணிவாக வாங்கிக்கொண்டேன். சுவாமி நீங்க, என்றேன். நான் யாருன்னு தெரிஞ் சுக்கனுமா? சொல்றேன் என்றவர் அருகில் இருந்த "விரி" யில் சென்று அமர்ந்தார். நானும் அவரின் அருகில் சென்று அமர்ந்து அவரை நன்றாகப் பார்த்தேன்.

பெரியவர் என்னைப்பார்த்து இரண்டு டீ சொல்லு என்றார். நான் சென்று டீ வாங்கிவந்தேன். அவர் டீ குடித்துக் கொண்டே, இது எனக்கு ஐம்பதாவது வருடம் என்றவர், இதற்குமேல் இனி என்னால் வர முடியாது. காசியிலேயே தங்கிவிடுவேன். என்றார் என்னைப் பார்த்து.

ஓ! காசியில் இருந்தா வருகின்றீர்கள் என்றேன் நான். ஆமாம் நடந்தே என்றார் அவர். நடந்தா நான் ஆச்சர்யப்பட்டேன். இதுக்கே ஆச்சர்யப்பட்டா எப்படி, இதை முடிச்சுட்டு இராமேஸ்வரம் வரை பாதயாத்திரை சென்று அங்கிருந்து இரயிலில் காசி சென்று விடுவேன். ஐம்பது ஆண்டுகளாக இதுவே எனது வழக்கம். என்றார்.

நான் அவரை நன்றாகப் பார்த்தேன். அவருக்கு வயது என்பதுக்குமேல் இருக்கும். பழுத்த பழம் போல் இருந்தார். நரைத்து நீண்டிருந்த தாடி அவரது நீண்ட கால அனுபவத்தை கூறியது. கூரான நாசியும், காந்தக் கண்களையும் கொண்டிருந்தார்.

சுவாமி, என் சற்குருவை பற்றி



சொல்றேன்னு சொன்னீங்களே! என்றதும், நான் சொல்றேன்னு சொல்லவிலலையே! என்றார். தெரிஞ் சுக்க வேணாமான்னு கேட்டீங்களே! என்று நான் திரும்பக் கூறியதும். ஆமாம் அப்படித்தான் கேட்டேன். காட்டுகிறேன்னு சொல்லவில்லை. வார்த்தைகள் மிக முக்கியம் என்றவாறே என் கால்கள் மிகவும் வலி எடுக்கின்றன. சற்று பிடித்துவிட முடியுமா? என்றார்.

நான் உடனே அவரது கால்களை பிடித்துவிட ஆரம்பித்தேன். அவர் அப்படியே மல்லாந்து படுத்துக் கொண்டார். சற்று நேரத்தில் அவரிடம் இருந்து குறட்டைச் சத்தம் வெளிப்பட ஆரம்பித்தது. நான் காத்திருந்தேன். அரை மணி நேரத்தில் அவரே எழுந்து கொண்டார். மீண்டும் ஒரு டீ சொல்லு என்றார். நான் சென்று அவருக்கு மட்டும் டீ வாங்கிவந்தேன்.

டீயைக் குடித்துவிட்டு,

புறப்படலாமா என்றபடி எழுந்து கொண்டார். நானும் அவருடனே புறப்பட்டேன். நடந்து கொண்டே ஏதேதோ பேசிக்கொண்டும், கேள்விகள் கேட்டுக் கொண்டும் வருகிறாரே ஒழிய ஒரு இடத்தில் கூட சற்குருவைப் பற்றி வாய் திறக்கவில்லை.

மதியம் வரை இதே கதைதான். மணி 12 இருக்கும் ஒரு மர நிழலில் அமர்ந்து அவரது ஜோல்னா பையை என்னிடம் இருந்து வாங்கி அதில் இருந்து இரண்டு உணவுப் பொட்டலங்களை எடுத்து இந்தா சாப்பிடு என்று ஒரு பொட்டலத்தை கொடுத்தார்.

பொட்டலத்தை கைகளில் வாங்கிக் கொண்ட நான், என் சற்குருவை நான் பார்க்க வேண்டும் அதற்கு வழி கூறுங்கள் பிறகு சாப்பிடுகின்றேன் என்றேன். முதலில் சாப்பிடு பிறகு கூறுகின்றேன் என்றார் அவர்.

நான் மறுபேச்சில்லாமல் உடனே சாப்பிட்டு முடித்தேன். அவரோ பொறுமையாக சாப்பிட்டு முடித்து, கைகளைக் கழுவிக்கொண்டு அங்கேயே துண்டை விரித்து தூங்க ஆரம்பித்தார். அவர் எப்போது விழிப்பார் என்று அருகிலேயே காத்திருந்தேன்.

மாலை ஐந்து மணிக்கு கண் விழித்தவர் அப்பாடா நல்ல தூக்கம் என்று எழுந்து கொண்டவர் உடனே துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு, போகலாம் வா என்று கூறிக்கொண்டே நடக்கலானார்.

நானும் அவரின் பின்னாலேயே ஓடுகின்றேன். அவர் திரும்பிப் பார்த்து வருகிறாயா வா, வேகமாக வா, இரவு பத்துக்குள் கரிமலை உச்சிக்குச் சென்று விட வேண்டும். என்றவர் மாலை எதற்கு போடுகின்றார்கள் தெரியுமா? என்றார் நான் பதில் கூறவில்லை. அவரே தொடர்ந்தார். மனம் அடங்க வேண்டும் என்பதற்காகத்தான். மனம் அடங்கிவிட்டால் மாலை தேவையா, என்ன சொல்லப்பா என்று என்னிடம் கேட்டார்.

நான் அதற்கும் பதில் கூறவில்லை. பிறகு அவரே தொடர்ந்தார். நான் அதனால்தான் போடவில்லை என்றார்.


இப்படியே பேசிக்கொண்டே கரிமலை உச்சிக்குவந்துவிட்டோம். இரவு பத்து மணி இருக்கும். ஓர் விரியில் சென்று தங்கினோம். இப்பொழுது எப்படியாவது அவரிடம் சற்குருவைப் பற்றி கேட்டுவிட வேண்டும் என்று முடிவெடுத்துக்கொண்டேன்.
விரியில் இருவரும் இரவு உணவாக கப்பங்கிழங்கை சாப்பிட்டோம்.

பெரியவர் கடைக்காரனிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.சாப்பிட்ட சற்றுநேரத்தில் எனக்கு கண்களை சுற்றிக்கொண்டு வர சற்றே விரியில் படுத்தேன். அவ்வளவுதான் அயர்ந்து தூங்கிவிட்டேன்.

கடைக்காரர் என்னை எழுப்பி, விடிந்துவிட்டது போய்கோ என்றபோது காலைமணி நான்கு. அரக்கப்பரக்க எழுந்த நான் பெரியவரை தேட, அருகில் பெரியவரைக் காணோம். கடைக்காரரிடம் கேட்டேன். இரவு பத்து மணிக்கே அவர் போய் விட்டதாகக் கூறினார். தண்ணீர் மொண்டு முகம் கழுவ கைகளில் ஊற்றும் போதுதான் என் உளளங்கைகளில் எழுதியிருந்ததைப் பார்த்தேன்.

சற்குருவை உன் பிள்ளை உனக்கு அடையாளம் காட்டுவாள் என்று எழுதியிருந்தது.

நூதன மூர்த்திகள் மற்றும் பாதுகைகள் பிரதிஷ்டாபன மகா கும்பாபிஷேக வைபவம்



ஸ்ரீ தத்தாத்ரேயரின் வழிகாட்டு தலின் படியும் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபரின் அனுகிரகத்தினாலும், ஸ்ரீ மாதா ஸ்ரீ வல்லபானந்தமயி அவர்களின் பெரும் முயற் சியினாலும், ஸ்ரீ பாத வல்ல பரின் அடியவர்களின் பல்வேறு வகையான உதவியினாலும் காஞ்சிபுரம் மேல்சிறுணை கிராமத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஸ்ரீ ஏக முக தத்தாத்ரேயர், ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர், ஸ்ரீ சீரடி சாய்பாபாவின் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டன.

அதற்குப் பிறகு, ஸ்ரீ வீர ஆஞ்சநேயர், ஸ்ரீ சக்ர தத் தாத்ரேயர், 2021 ஆம் ஆண்டு பிரதிஷ்டை செய்யப் பட்டது.

அதுமட்டுமின்றி சென்ற 24.6.22 வெள்ளிக்கிழமை அன்று தத்தரின் அவதாரங் களான, ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி சுவாமி, அக்கல்கோட் மகராஜ் ஸ்ரீ சுவாமி சமர்த்த, ஸ்ரீ மாணிக் பிரபு சுவாமி, கஜானன் மகராஜ் என அனைத்து குரு அவதாரங்களின் மூர்த்திகளும், பாது கைகளும், பிரதிஷ்டை செய்யப்பட்டு மகா குடமுழுக்குப் பெருவிழா மிகச்சிறப் பாக நடைபெற்றது.

இந்தப் பாதுகைகள் அந்தந்த தத்த அவதாரங்களின் பூர்வீக இடங்களில் இருந்து அனுப்பப்பட்டு இங்கே பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. அனைத்து தத்த அவதாரங்களும், அவர்களது பாதுகைகளும், நம் தமிழ் நாட்டில் ஒரே இடத்தில் பார்த்து வழிபட்டு அருள் பெறக் கூடிய சிறப்புவாய்ந்த ஸ்தலமாக





மேல்சிறுணையில் அமைந்துள்ள ஸ்ரீ சக்ர தத்தா ஸ்ரீ பாத ஸ்ரீ சாய் பீடம் அமைந்திருக்கின்றது.

திருவடி தரிசனம் பெறுவது என்பது பெரும் பாக்கியம். அதுவும் தத்த அவதாரங்களின் அனைத்து திருவடி தரிசனத் தைய்ம் ஒரே இடத்தில் தரிச னம் பெருவது என்பது பெரும்பேறு. அப்பெறும் பேற்றை நாம் நினைத்தவுடன் பெற்றுக் கொள்ளும் வகையில் நம் தமிழ் நாட்டில் காஞ்சிபுரம் அருகில் மேல்சிறுணையில் அமைந் திருப்பது நமது பாக்கியமே!



குடமுழுக்குப் பெரு விழாவிற்கு பக்தர்களும், பொதுமக்களும் பெருந் திரளாக வந்திருந்து கலந்து கொண்டு குருவருள் பெற் றனர். அனைவருக்கும் சிறப்பு அன்னதானம் வழங்கப் பட்டது.

வாய்புள்ளவர்கள் அவசியம் மேல்சிறுணை சென்று குருவருள் பெற்று திருவருள் பெற்றுய்ய வேண்டுகின்றோம்.

குரு வாழ்க!
குருவே துணை!



சாயி ம

தொடர் –12

சாய் சரவணன்

"அதி தேவதை"

இவர்கள் மாடிக்குச் செல்வதற்கும், சுந்தராபாயி தியானத்தில் இருந்து விழிப்பதற்கும் சரியாக இருந்தது.

நானா, சுந்தராபாயை சந்திப்பதற்கு பூஜை அறையில் நுழைந்தார். பூஜை அறையில் ஓர் அற்புதமான அதிர்வலைகளை உணர்ந்தார். அங்கே விட்டலனது சித்திரம், சிறிய கிருஷ்ண விக்கிரகம், இன்னும் சில மூர்த்திகள் அழகாக பூக்களால் அலங்கரிக்கப்பட்டு மலர்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அதன் எதிரே மான் தோலில் வெள்ளைப் புடவையால் முக்காடிட்டு பளிங்குச் சிலைபோல் அசையாது சுந்தராபாயி அமர்ந்திருந்ததை நானா கண்டார். கண்களை மெல்ல திறந்தவள் நானாவைப் பார்த்து, வாருங்கள் பெரியப்பா என்று அன்போடு அழைத்தாள்.

பிறகு வாருங்கள் பெரியப்பா, கீழே சென்று உணவருந்தியபின் பேசலாம். என்றவாறே என்னைபற்றி பிக்குபாயி எல்லாவற்றையும் உங்களிடம் கூறியிருப்பாள். நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள் என்று வினவினாள்.

நானாவிற்கு, அவளது அமைதியும் பண்பான நடவடிக்கையும், அவள் ஆன்மீகத்தில் உயர்ந்த நிலையில் இருப்பதை உணர்த்தியது. உணவிற்குப் பின்பு நானா சுந்தரா பாயிடம் பேசினார். மகளே, பிக்குபாயி உன்னைப் பற்றி அனைத்தையும் கூறினாள். உண்மையில் தெய்வத்தின் அருள் உனது வாழ்வில் நிறைந்து இருக்கின்றது.

பெரியப்பா தாங்கள் இனிமேல் பண்டரிபுரத்தில் தானே வாசம் செய்யப் போகின்றீர்கள். என்றாள் சுந்தராபாயி. எனக்கு பண்டரிக்கு உத்யோக மாற்றம் ஆனது இவளுக்கு எப்படித் தெரியும் என்று வியந்தவாறே, ஆமாம் எனக்கு பண்டரிக்கு உத்யோக மாற்றம் ஆகியிருக்கிறது. நான் பண்டரியில் தான் வசிக்கப் போகின்றேன் என்றார்.

மேலும் நானா கூறினார். உன்னுடைய பக்தி, திட உள்ளம், யோக சாதனை எல்லாம் பார்த்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். உன்னை இந்த நிலையில் பார்க்கும்போது எனக்கு ஒன்று தோன்றுகின்றது. உனக்கு தற்போது மிகவும் தேவையானது ஒரு நல்ல சற்குருவின் உபதேசம். நீ சீரடிக்கு வருகின்றாயா? ஓர் உயர்ந்த உன்னதமான சற்குருவை நீ சந்திக்கலாம். எங்கள் சாயிபாபாவைப் பற்றி உனக்கு தெரியுமல்லவா? என்றார் நானா.

அதற்கு சுந்தராபாயி, நான் எனக்குண்டான சற்குருவை தேடித்தேடி களைத்துப் போய் இப்போதுதான் சற்று ஓய்வாய் இருக்கிறேன் பெரியப்பா. ஆகையால் இப்போது உடனடியாக உங்களுடன் வர முடியாததற்கு வருந்துகிறேன்.

நிச்சயமாக சில காலங்கள் கழித்து நான் வருகின்றேன். ஆனால் ஒரு நிபந்தனை. நான் உங்கள் சாயிபாபாவை காணும்போது

அவருள் நான் என் விட்டலனை கண்டால் தான் நான் அங்கு மேற்கொண்டு தங்குவது பற்றி யோசிப்பேன் என்றாள்.

மிக்க சரியாய் கூறினாய் சுந்தராபாய், நீ எப்போது சீரடிக்கு வருகின்றாய் என்று முடிவெடுக்கின்றாயோ அப்போது எனக்கு தெரியப்படுத்து. நானே உன்னை சாயிபாபாவிடம் அழைத்துச் செல்கிறேன் என்று கூறி விடைபெற்றார்.

நானா சென்றதும் பிக்கு பாயி, சுந்தராபாயிடம், அக்கா நீ சீரடிக்கு போகப் போகிறாயா என்று கேட்டாள். சுந்தராபாயோ, ஏதும் பதில் கூறாது மவுனமாக மாடிக்குச் சென்று பூஜை அறையில் தியானத்தில் அமர்ந்தாள்.

தொடர்ந்து ஒன்பது நாட்கள் அன்ன ஆகாரம் இன்றி யோக நிஷ்டை யிலேயே நாட்களை கழித்தாள். பிக்குபாயிக்கோ சுந்தராபாயின் உடல் நலத்தின்மேல் கவலை ஏற் பட்டது. இருப்பினும் தனது கடமைகளை விடாது செய்து கொண்டிருந்தாள். பத்தாம் நாள் காலையில் சுந்தராபாய் பிக்குபாயை அழைத்தாள்.

பத்து நாட்கள் கழித்து கேட்ட சுந்தராபாயின் குரலுக்கு ஓடோடி வந்தாள் பிக்குபாயி. சுந்தராபாயி கூறி னாள். நான் சீரடிக்குச் செல்ல முடிவு எடுத்து இருக்கின்றேன். நான் வருவதாக பெரியப்பாவிற்கு கடிதம் எழுதிவிடு எனக்கூறினாள். பிக்குபாயும் உடனடியாக நானாவிற்கு கடிதம் எழுதி அனுப்பினாள்.

நம் பகவான் சாயிபாபா ஈடு இணை யில்லாத தெய்வம் ஆவார் நம்மை அவரது திருவடிக்கு இழுத்துக் கொண்டு பல எண்ணற்ற லீலைகளையும், பாது காப்பையும் அளித்து வருகின்றார். பாரதப் புண்ணிய பூமியில் எத்தனையோ மகான்கள் அவதரித்தாலும், பாபாவைப் போன்ற ரத்தினங்கள் ஒன்றோ, இரண்டோதான் தேறும்.

எல்லா தெய்வங்களும், எல்லா மகான் களும் ஒன்றே என்பதே அவரது வாக்கு.



இருப்பினும் அவரது விலை மதிக்க முடியாத உபதேசங்களை உணர்ந்து அதன் அர்த்தத்தை அறிந்து கொண்டு ஆன்மீகத்தில் முன்னேறியவர்கள் வெகு சிலரே!

எங்கும் அவர் இருக்கின்றார். எல்லா தெய்வங்களின் வடிவமும் அவரே! எல்லா மகான்களின் சங்கமமும், ஆதாரமும்



அவரே! தன்னிடம் வந்த அடியவர்களின் எத்தனையோ பிறவிகளையும், முக் காலத்தையும் அறிந்து வைத்துக் கொண்டு அவர்களுக்கு தக்க சமயத்தில் நேரில் சென்று உதவி புரியும் கருணாமூர்த்தியின் திருவடிக்கு சேவை செய்வதற்காகவே அவதரித்தவள் நம் சுந்தராபாயி.

அவள் சீரடிக்கு வந்த உடன் சீரடி தேவலோகம் போல் மாறப்போகின்றது. எனவே சுந்தராபாயி சீரடிக்கு வருவதற்கு முன்பாக சீரடியின் தோற்றம் பற்றியும், பாபாவைப் பற்றியும் சில குறிப்புகளைக் காண்போம்.

அந்நாளையில் சீரடி அடிப்படை வசதிகள் கூட இல்லாத சிறிய கிராமமாகவே இருந்தது. இந்துக்களும் இஸ்லாமியர்களும் ஆங்காங்கே வாழ்ந்து வந்தனர். சிறு சிறு கோவில்களும், எல்லைக் கோவில்களும் இருந்தன. அதில் கண்டோபா கோவில் பிரசித்தமானது. சீரடியை சுற்றி அடர்ந்த காடுகளே இருந்தன. மக்கள் தங்களின் வீட்டிற்குத் தேவையான விறகுகளை அங்கிருந்தே சேகரித்தனர்.

ஆலந்தி எனும் கிராமத்தை ஞானத்தேவரும், கனகாபூரை நரசிம்ம சரஸ்வதியும் எப்படி உயர்ந்த புண்ணிய தலமாக உயர்த்தினார்களோ, அதேபோன்று சீரடி என்ற கிராமத்தின் மகி மையை உலகிற்கு உணர்த்தவே நம் சாயி சீரடிக்கு பதினாறு வயது பாலகனாக வந்தார்.

அந்த நாளில் சீரடியில் பாழ டைந்த மசூதி ஒன்று இருந்தது. அது எப்போது விழுந்து உடைந்து விடுமோ என்ற நிலையில் பாம்பு, தேள் பூரான் போன்ற பிராணிகள் வாழும் இடமாக காணப்பட்டது. பாபா சீரடிக்கு வந்து இந்த புனிதமான மசூதியின் மேன்மையை உணர்த்தி உலகத்திற்கே சாய் பக்தர்களின் தாய்வீடாக விளங்கப் போகின்ற அம்மசூதிக்கு

"துவாரகாமாயி" என்று பெயரிட்டு அங்கேயே தங்கினார்.

பாபாவை ஆரம்ப காலங்களில் சீரடி வாசிகள் பைத்தியம் என்றே அழைத்தனர். அதன்பிறகு, நோயுற்றவர் களுக்கு பச்சிலையை வைத்தியம் செய்ததால் அவரை வைத்தியன் என்றனர். பிற்காலத்தில் தண்ணீரில் விளக்கேற்றியதால் சக்தி வாய்ந்த சித்தர் என்றனர். இருப்பினும் பலர் அவரை மதிக்காமல் நடந்து கொண்டனர்.

சுத்தமில்லாத, முட நம்பிக்கைகளை கொண்ட கிராமமாகவே சீரடி இருந்தது. பல மகான்கள் பாபாவை உயர்ந்த ரத்தினம் என்று போற்றிப் புகழ்ந்தாலும் பாமர மக்கள் அவரை உணராது காலத்தை கழித்தனர். 1858 முதல் 1906 வரை சீரடி மக்கள்

காலரா, பிளேக் போன்ற நோயினால் மிகவும் சிரமப்படனர்.

பாபா தாம் வாழும் மசூதியை தானே சுத்தம் செய்து கொள்வார். பாபாவின் லீலையால் எண்ணற்ற பக்தர்கள் பாபாவை தரிசிக்க சீரடிக்கு வருவர். தாஸ்கணு, தாமு அண்ணா, மஹல்சாபதி, டேங்கிளே, சியாமா, நானா சாகேப் சாந்தோர்கர், அமீர் போன்ற சில அடியவர்களே பாபாவின் மதிப்பை உணர்ந்து கொண்டு அவரை மதித்து வந்தனர்.

பாபாவின் தோற்றமோ மிகவும் எளிமையானது. நீண்ட கப்னி உடையை அணிந்து, தலையில் ஒரு கட்டோடு இருப்பார். சிலநாட்கள் குளிப்பார். பல நாட்கள் குளிக்காமல் இருப்பார். தினமும் சீரடி மக்களின் வீடுகளுக்கு முன் நின்று பிச்சை எடுப்பார். புதிதாகப் பார்ப்பவர்களுக்கு அவர் பிச்சைக் காரனைப போலவே காணப்படுவார்.

நம் சுந்தராபாயி சீரடிக்கு வருவதற்கு முன்பு ஓர் நாள் பாபா மசூதியின் முன்பாக ஒரு துளசிமாடம் ஒன்றைக் கட்டி அதில் துளசிச் செடியை நட்டார்.

பக்தர்களிடம் துளசியின் பெருமை களைக்கூறி, திக்கற்றவர்களை துளசித் தாய் ஆதரவளித்து இறைவனிடம் சேர்ப்பாள் என்றும், துளசி இருக்கும் இடம் விரைவில் பிருந்தாவனமாக மாறப் போகின்றது என்றும் சூசகமாக தெரிவித்தார். அது காலப்போக்கில் உண்மையானது சீரடி என்ற பிருந்தாவனத்தை அலங்கரிக்க உதித்தவளே இராதாகிருஷ்ணமாயி.

- (தொடரும்...)

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

இம்மாத சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் திருவள்ளூர் செங்காடு இரட்டை சித்தர்களான ஸ்ரீலஸ்ரீ முத்தையாசுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ பத்ராட்சம்மா ஆகியோரின் சீவசமாதி தரிசனம் காண்போம் வாருங்கள்.

ஸ்ரீலஸ்ரீ முத்தையாசுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ பத்ராட்சம்மா

150 ஆண்டுகளுக்கு முன்பு ஆந்திர தேசத்தில் இருந்து இங்கு வந்து தங்கினர் சித்தர் இருவரும். அக்காலத்தில் இப்பகுதி செம்மண் பூமியாகவும், சவுக்கு, நொச்சி மரங்கள் நிறைந்த காட்டுப் பகுதியாக இருந்தமையால் செங்காடு என்று வழங்கப்பட்டிருக்கின்றது.

சித்தர்கள் இருவரும் தீவிர பெருமாள் பக்தர்களாக இருந்தார்கள். வருடம் தோறும் புரட்டாசி மாதம் செங்காட்டில் இருந்து திருப்பதிக்கு நடந்தே சென்று பெருமாளை வழிபட்டு வந்திருக்கின்றனர்.

பெருமாள் மீது கொண்ட தீவிர பக்தியால் செங்காட்டுப் பகுதியில் பெருமாளுக்கு ஒரு சிறிய ஆலயம் கட்டி வழிபட்டு வந்தனர். தன்னை நாடிவந்த



பக்தர்களின் நோய்களையும் அவர்களின் பிரட்சனைகளையும், திருநீறை அளிப்பதன் மூலமே குணமாக்கி வந்தனர். ஆகவே இவர்களை நாடி மக்கள் கூட்டம் கூட்டமாக வரத்தொடங்கினர்.

ஒருமுறை வறட்சியின் காரணமாக ஊர் மக்கள் தண்ணீர் இன்றி தவித்தனர். சித்தர்கள் இருவரும் மழை நீரை சேமிக்கும் வகையில் ஓர் குளத்தை வெட்டி மழை நீரை தேக்கினர். அவ்வூர் மக்கள் அக்குளத்து நீரையே குடிநீராக பயன் படுத்தி தண்ணீர் பஞ்சத்தைப் போக்கிக் கொண்டனர்.

பெருமாள் ஆலயத்தில் விளக்கேற்ற எண்ணை இல்லாத நேரங்களில் சித்தர் இருவரும் இக்குளத்து நீரையே எண்ணையாகப் பயன்படுத்தி விளக்கெரித்து வந்தனர்.

சித்தர்கள் அடிபட்டு இறக்கும் தறுவாயில் இருந்த ஒரு நாயை காப்பாற்றி வளர்த்து வந்தார்கள். அதுவும் இவர்களுக்கு நன்றி உணர்வுடன் நடந்து கொண்டது. சித்தர்கள் உறங்கும் போது இது இரவில் உறங்காது. பகலில் மட்டுமே உறங்கும்.

தம்மை நாடி வந்த பக்தர்களுக்கு பிரதிபலன் பாராது அநேக நன்மைகளை அளித்து வந்த சித்தர்கள் தங்களது பக்தர்களிடம் தாங்கள் இருவரும் ஒரே நேரத்தில் சமாதியாகப் போவதாக தெரிவித்து அப்படியே சமாதியானார்கள். சித்தர்கள் இருவரும் சமாதியான போது, அவர்கள் வளர்த்து வந்த பைரவரும், அவர்களை மும்முறை வலம் வந்து தானும் அதே இடத்தில் சமாதி அடைந்தது.

தற்போது சித்தர்கள் ஏற்படுத்திய குளம் மண்ணால் முடப்பட்டுள்ளது. இவர்கள் கட்டிய பெருமாள் ஆலயமும்





இடிந்து சிதிலமடைந்துள்ளது. சித்தர்களின் சீவ சமாதியும் பாழடைந்து தற்போது, சித்தர்களின் சீவசமாதியும், பைரவரின் சமாதியும் மட்டும் மிஞ்சியுள்ளது.

நல்ல உள்ளம் கொண்ட பக்தர்கள் சித்தர்களின் சமாதிக்கு மேற்கூரை அமைத்து விளக்கேற்ற வழிவகை செய்தால் நன்றாக இருக்கும். வருடம் தோறும் புரட்டாசி மாதம் கடைசி சனிக்கிழமை சித்தர்களுக்கு குருபூஜை நடக்கின்றது.

சித்தர்களின் ஆற்றலை உணர்ந்து கொண்ட பக்தர்கள், இன்றும் சித்தர்களை வணங்கி செய்யும் காரியங்கள் தங்கு தடையின்றி நிறைவேறுவதை தாங்கள் உணர்ந்திருக்கின்றோம் என்று கூறுகின்றனர்.

வாழும் போது தரிசனம் செய்யாத சித்தர் பெருமக்களை, அவர்களின் சீவசமாதிக்குச் சென்று வழிபட்டாவது நமது கர்ம வினைகளை குறைத்துக் கொள்வோம்.

சித்தர்களை வணங்கி அவன்தாள் பணிவோம்!

சீரான வாழ்க்கையை சிக்கலின்றி பெறுவோம்!

சீவபீட முகவரி:

ஸ்ரீலஸ்ரீ முத்தையாசாமி,

ஸ்ரீலஸ்ரீ பத்ராட்சம்மா சீவசமாதி ஆலயம், செங்காடு (பாளையம்) கிராமம், திருவள்ளூர் - 602002.

சென்னையில் இருந்து வருபவர்கள் மணவாள நகர் வழியாகவும், ஸ்ரீ பெரும்புத்தூர் வழியாகவும் வரலாம். திருவள்ளூர் மணவாள நகர் வழியாக வந்தால் அங்கிருந்து 20 கி. மீட்டர் தூரத்தில் வலது புறத்தில் முத்துவீரன் கோவில் வளைவைக் காணலாம் அதன் உள்ளே ஒரு கி.மீட்டர் தூரம் பயணித்தால் சித்தர்களின் சீவ சமாதி ஆலயத்தைக் காணலாம்.

பேரூந்து வழித்தடம்:

சென்னை கோயம்பேடு திருவள்ளூர். திருவள்ளூர் ஸ்ரீ பெரும்புத்தூர்.

இறங்குமிடம்: செங்காடு.

புகைவண்டி வழித்தடம்:

சென்னை கடற்கரை திருவள்ளூர்.

திருவள்ளூர் இரயில் நிலையத்தில் இருந்து ஷேர் ஆட்டோ மூலம் மணவாள நகர் வழியாக செங்காடு செல்லலாம்.

- (தொடரும்)

ஓம் சாய்ராம்

"வாழ்வை வளமாக்கும் சாயி லிகித ஜபம்"

சாய் அன்பர்களே,



முயற்சி திருவினையாக்கும் என்பது வள்ளுவம். வாருங்கள் நாமும் இந்த லிகித நாம ஜெபத்தை ஊக்கத்துடன் முயன்று செயல்பாட்டில் ஆக்கம் காண்போம். சத்குரு சாய் மஹராஜ் திருவருளால் நம் வாழ்வில் மன அமைதியோடு கூடிய வெற்றியைக் காண்போம்.

நமது லிகித நாம ஜபம்
"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்"

நம் எல்லோருடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒளி ஒலி வீசட்டும். இதுவரை (30.11.20) நாட்களாக தினமும் 108 முறை எழுதிவரும் நம் சாய் அன்பர்களுடன் இணைந்து சாய் மஹராஜ் திருவருள் பரிபூரணமாக நம்மை வழிநடத்த ப்ரார்த்திப்போம்.

'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

யோகி பரமஹம்ஸ

யோகானந்தா

பரமஹம்ஸ யோகானந்தர் 1893ம் ஆண்டு ஜனவரி 5 ம் தேதி இந்தியாவில், கோரக்பூரில் இறைப்பற்று கொண்ட வசதியான வங்காளியர் குடும்பத்தில் பிறந்தார். அவருடைய இயற்பெயர் முகுந்தலால் கோஷ். அவரது குழந்தைப்பருவத்தில் இருந்தே, அவருடைய விழிப்புணர்வு மற்றும் ஆன்மீக அனுபவத்தின் ஆழம் அசாதாரணமாக இருந்தது என்பது அவரைச் சுற்றியிருந்தவர்களுக்கு தெளிவாகத் தெரிந்திருந்தது.

அவரது பெற்றோர்கள் இருவரும், நவீன இந்தியாவில் கிரியா யோகத்தை அறிமுகப்படுத்துவதற்கு ஒரு கருவியாக செயல்பட்ட புகழ்பெற்ற மகான் லாஹிரி மகாசயரின் சீடர்களாக இருந்தனர். யோகானந்தர் தனது தாயிடம் ஒரு கைக்குழந்தையாக இருந்தபோது, லாஹிரி மகாசயர் அவரை ஆசீர்வதித்து முன்னறிவித்தார் "இளந்தாயே, உன் மகன் ஒரு யோகியாவான். ஆன்மீக ஆற்றலால் அவன் அனேக ஆன்மாக்களை இறைவனின் சாம்ராஜ்யத்திற்குக் கொண்டுசெல்வான்."

அவரது இளமைப் பருவத்தில், தனது ஆன்மீகத் தேடலுக்கு வழி



காட்டக்கூடிய ஞானஒளி பெற்ற குரு ஒருவரைக் கண்டறியும் எதிர்பார்ப்பில், முகுந்தன், இந்திய ஞானிகள் மற்றும் மகான்களில் பலரை நாடிச்சென்றார். 1910ம் ஆண்டில்தான்



தன் பதினேழாவது வயதில், ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர் கிரி அவர்களை சந்தித்து அவரது சீடரானார். யோகத்தில் சிறந்த மகானாகிய இவரது ஆசிரமத்தில், தனது வாழ்க்கையின் அடுத்த பத்து வருடங்களின் சிறந்த பகுதியை, ஸ்ரீ யுக்தேஸ்வரரின், கண்டிப்பான ஆனால் அன்பான ஆன்மீகப் பயிற்சி பெறுவதில் கழித்தார்.

அவர்களது முதல் சந்திப்பிலும், அதன் பின்னர் பல சந்தர்ப்பங்களிலும் ஸ்ரீ யுக்தேஸ்வர், இளம் சீடரிடம் உலகம் முழுவதிலும் புராதன விஞ்ஞானமாகிய கிரியா யோகத்தைப் பரப்புவதற்கு அவர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார் என்று கூறினார்.

1915ம் ஆண்டில் கல்கத்தா பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்ற பிறகு முகுந்தன், இந்தியாவின் வணங்குதற்குரிய துறவறத்தின் ஸ்வாமி பரம்பரையில் ஒரு சன்னியாசியாக முறையான உறுதிமொழி எடுத்துக் கொண்டார், அந்த நேரத்தில் அவர் யோகானந்தர் என்ற பெயரைப் பெற்றார். இறையன்பு மற்றும் இறைச்சேவைக்கு தன் வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்ற அவருடைய தீவிர விருப்பம் நிறைவேறியது.

யோகானந்தர் தனது வாழ்க்கையின் பணியினை, 1917ம் ஆண்டில், சிறுவர்களுக்கான "எப்படிவாழவேண்டும்" என்ற பள்ளியை தொடங்கினார். அங்கு நவீன கல்வி முறைகளுடன் யோகப் பயிற்சி மற்றும் ஆன்மீக இலட்சியங்கள் பற்றிய போதனைகள் கற்பிக்கப்பட்டன. காசிம்பஜார் மகாராஜா ராஞ்சியிலிருந்த தனது கோடைக்கால அரண்மனையை பள்ளிக்கான இடமாக தானமாக அளித்தார்.சில ஆண்டுகளுக்குப் பிறகு பள்ளிக்கு வருகைபுரிந்த மகாத்மா காந்தி அவர்கள் இவ்வாறு எழுதினார் "இந்த நிறுவனம் என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது."

1920ம் ஆண்டில் ஒரு நாள், ராஞ்சி பள்ளியில் தியானித்துக்

கொண்டிருந்தபோது, யோகானந்தருக்கு, இப்போது மேலைநாடுகளில் தனது பணியைத் தொடங்குவதற்கான நேரம் இது என்பதைக் காண்பித்த தெய்வீகக் காட்சி கிடைக்கப்பெற்றது. அவர் உடனடியாக கல்கத்தாவுக்கு புறப்பட்டார். அங்கு, மறுநாள் அவர் அந்த ஆண்டின் பிற் பகுதியில் பாஸ்டனில் கூட்டப்ப டவிருந்த சர்வதேச சமயத் தலைவர்களின் மகாசபைக்கு இந்தியாவின் பிரதிநிதியாக பங்கேற்க அழைக்கப்பட்டார்: "உனக்கு எல்லாக் கதவுகளும் திறந்திருக்கின்றன. இப்பொழுது போனால்தான் உண்டு. இல்லா விடில் எப்பொழுதும் இல்லை," என்று கூறி அது சரியான சமயம் என்பதை ஸ்ரீ யுக்தேஸ்வரர் உறுதிப்படுத்தினார்.



அவர் புறப்படுவதற்கு சற்று முன்பு யோகானந்தரிடம், புராதன விஞ் ஞானமாகிய கிரியா யோகத்திற்கு இந்த யுகத்தில் புத்துயிரூட்டிய மரணமற்ற மகான் மகாவதார பாபாஜி வருகை புரிந்தார். "மேலைநாடுகளில் கிரியா யோக முறைகளைப் பரப்ப நான் உன்னைத்தான் தேர்ந்தெடுத் திருக்கிறேன்" என்று பாபாஜி யோகானந்தரிடம் கூறினார்.

"வெகு காலத்திற்கு முன் நான் உன் குரு யுக்தேஸ்வரை ஒரு கும்பமேளாவில் சந்தித்தேன்; அப்பொழுது நான் அவரிடம் பயிற்சி பெறுவதற்காக உன்னை அனுப்புவதாகக் கூறினேன். இறை அனுபூதிக்கான விஞ்ஞான உத்தியான கிரியா யோகம் இறுதியில் எல்லா நாடுகளிலும் பரவும், என்று கூறினார்.

இளம் ஸ்வாமி 1920, செப்டம்பரில் பாஸ்டனுக்கு வந்தார். சர்வதேச சமய மிதவாதிகளின் மகாசபையில் அவர் "சமய விஞ்ஞானம்" என்ற தலைப்பில் முதல் உரை ஆற்றினார். அது உற்சாகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதே ஆண்டில் அவர் இந்தியாவின் புராதன விஞ்ஞானம் மற்றும் தத்துவமாகிய யோகம் மற்றும் அதன், காலத்தால் போற்றப்படும் தியான மரபையும் பற்றிய தனது போத னைகளை உலகளவில் பரப்புவதற்காக செல்ப்ரியலைசேஷன் பெலோஷிப் ஐ நிறுவினார். வாழ்நாள் சீடர்களாக ஆகப்போகும் டாக்டர் வி.கீ. லூயிஸ், திருமதி. வி.கீ. லூயிஸ், மற்றும்

திருமதி ஆலிஸ் ஹேசி ஆகியோரின் உதவியுடன் முதல் எஸ் ஆர் எஃப் தியான மையம் பாஸ்டனில் தொடங்கப்பட்டது.

அடுத்த பல ஆண்டுகளுக்கு, அவர் கிழக்குக் கடற்கரை பகுதிகளில் சொற்பொழிவாற்றிக் கற்பித்தார்; 1924ல் அமெரிக்கக் கண்டம் முழுவதிலும் சொற்பொழிவாற்றும் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். 1925ம் ஆண்டின் முற்பகுதியில் லாஸ் ஏஞ்ஜலீஸ்ஐ அடைந்து, அங்கு அவர், மவுண்ட் வாஷிங்டனின் உச்சிப் பகுதியில் செல்ப்ரியலைசேஷன் பெலோஷிப்பிற்காக, ஒரு சர்வதேச தலைமையகத்தை நிறுவினார், இது அவரது வளர்ந்துவரும் பணியின் ஆன்மீக மற்றும் நிர்வாக மையமாக மாறியது.

1924 முதல் 1935 வரை, யோகானந்தர் பரவலாகப் பயணம் மேற்கொண்டு, சொற்பொழிவுகள் ஆற்றினார், அமெரிக்காவில் மிகப் பெரிய அரங்குகள் நிறைந்த சபையோருக்கு உரையாற்றினார்.

யோகானந்தர் உலகின் பெரிய சமயங்களின் அடிப்படை ஒற்றுமையை வலியுறுத்தினார். மேலும், இறைவனின் நேரடி தனிப்பட்ட அனுபவத்தை அடைய அனைவருக்கும் பொருந்தக் கூடிய வழிமுறைகளை கற்பித்தார். அவரது போதனைகளில் தீவிரமாக இருந்த மாணவர்களுக்கு ஆன்ம விழிப்புணர்வை ஏற்படுத்தும் உத்திகளாகிய கிரியா யோகத்தை, போதித்தார். மேலை நாடுகளில் தனது முப்பது ஆண்டுகளில் 1,00,000 க்கும் மேற்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் கிரியா யோக தீட்சை அளித்தார்.

அவரது மாணவர்களாக மாறியவர்களில், தோட்டக்கலை நிபுணர் லூதர் பர்பாங்க் உட்பட, விஞ்ஞானம், வணிகம் மற்றும் கலைகளில் பிரபலமானவர்களான ஓபரா பாடகி அமிலிதா கலிகுர்ஸி, ஜார்ஜ் ஈஸ்ட்மேன் (கோடக் கேமரா கண்டுபிடிப்பாளர்), கவிஞர் எட்வின் மார்க்கம், இசைக்குழு இயக்குனர் லியோபோல்ட் ஸ்டோகோவ்ஸ்கி ஆகியோர் இருந்தனர்.

1929ம் ஆண்டில், மெக்ஸிகோவிற்கு சென்ற இரண்டு மாத பயணத்தின் போது, லத்தீன் அமெரிக்காவில் தனது பணியின் எதிர்கால வளர்ச்சிக்கான விதைகளை விதைத்தார். மெக்ஸிகோவின் ஜனாதிபதி டாக்டர் எமிலியோ போர்டெஸ் கில் அவரை வரவேற்றார். பின்னர், அவர் யோகானந்தரின் போதனைகளுக்கு தனது வாழ்நாள் முழுவதும் அபிமானியாக இருந்தார்.

அவரது சேவையின் ஆரம்பகால வருடங்களில் யோகானந்தரின் உரைகள் மற்றும் வகுப்புகள் அவ்வப் பொழுதுதான் பதிவு செய்யப்பட்டன. இருப்பினும், ஸ்ரீ தயா மாதா (பின்னர் அவரது உலகளாவிய அமைப்பின் தலைவரானார்) 1931ல் அவரது ஆசிரமத்தில் சேர்ந்த போது, யோகானந்தரின் நூற்றுக்கணக்கான சொற்பொழிவுகள், வகுப்புகள், இயல்பான உரையாடல்கள், ஆகியவற்றை விசுவாசத்துடன் பதிவு செய்யும் புனிதப் பணியை மேற்கொண்டார்.

இதனால் அவரது ஞானமும் அகத்தூண்டுதலும் அவற்றின் மூல சக்தியுடனும் பரிசுத்தத்துடனும் பாதுகாக்கப்பட்டு, எதிர்கால தலை



முறைகளுக்கு செல்ப்ரியலைசேஷன் பெலோஷிப்பினால் வெளியிடப்பட்டது

1935ம் ஆண்டில், யோகானந்தர் இந்தியா திரும்பினார். (ஸ்ரீ யுக்தேஸ்வர் 1936 மார்ச் 9 அன்று மறைந்தார்). ஐரோப்பா, பாலஸ்தீனம் மற்றும் எகிப்து வழியாக கப்பல் மற்றும் மோட்டார்வாகனம் மூலம் பயணம் செய்த அவர் 1935 கோடையில் மும்பையை வந்தடைந்தார்.

யோகானந்தர் தனது தாய்நாட்டில் ஒரு முழு ஆண்டு தங்கியிருந்த போது, துணைக்கண்டம் முழுவதும் உள்ள நகரங்களில் வகுப்புகள் நடத்தினார் மற்றும் கிரியா யோக தீட்சை அளித்தார். கிரியா யோக தீட்சையை அருளுமாறு கேட்டுக் கொண்டார் மகாத்மா காந்தி,

நோபல் பரிசு பெற்ற இயற் பியலாளர் சர் சி.வி.ராமன், இந்தியா வின் பிரபலமான ஆன்மீக பெருந்த கைகளான ரமண மகரிஷி மற்றும் ஆனந்தமயிமா உள்ளிட்ட சிலருடனான சந்திப்புகளில் மகிழ்ச்சி அடைந்தார். இந்த ஆண்டின் போதுதான் ஸ்ரீ யுக்தேஸ்வர் அவருக்கு இந்தியாவின் மிக உயர்ந்த ஆன்மீகப் பட்டமான பரமஹம்ஸர் என்ற பட்டத்தை வழங்கினார்.

நேரடி அர்த்தத்தில் “மிக உயர்ந்த அன்னம்” இந்தப் பட்டம், இறைவனுடன் ஐக்கியமான இறுதி நிலையில் நிலைபெற்றிருக்கும் ஒருவரைக் குறிக்கிறது. இந்தியாவில் இருந்தபோது, யோகானந்தர் தனது பணிக்கான நிரந்தர அடித்தளமான, ‘யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா’வை நிறுவினார்.

அதன்பிறகு 1936ன் பிற்பகுதியில் அவர் அமெரிக் காவுக்குத் திரும்பினார், அங்கு அவர் தனது வாழ்நாள் இறுதிவரை வாழ்ந்து வந்தார்.

வருங்கால சந்ததியினருக்கு தனது செய்தியைக் கொண்டுசெல்லும் நூல்களை எழுதுவதற்குத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவும், யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா செல்ப்ரியலைசேஷன் பெலோஷிப்இன் ஆன்மீக மற்றும் மனிதகுலச் சேவைக்கு

நீடித்த அடித்தளத்தை உருவாக்கவும், 1930களில் பரமஹம்ஸ யோகானந்தர் நாடு முழுவதும் ஆற்றி வந்த பொதுச் சொற்பொழிவுகளிலிருந்து ஓரளவு விலகத் தொடங்கினார்.

அவரது வழிகாட்டுதலின் கீழ், அவர் தனது வகுப்பு மாணவர்களுக்கு வழங்கிய தனிப்பட்ட அறிவுரையும் போதனையும் வீட்டிலிருந்தே கற்பதற்கான யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா பாடங்கள் என்ற விரிவான தொடராக தொகுக்கப்பட்டன.

கலிஃபோர்னியா, என்சினிடஸ்ல் பசிஃபிக் பெருங்கடலை மேலிருந்து நோக்கிய வாறு ஓர் அழகான ஆசிரமம், குருவிற்காக, அவர் இந்தியாவில் இருந்தபொழுது, அவரது அன்பு சீடரான ஸ்ரீ ஸ்ரீ ராஜரிஷி ஜனகானந்தரால் கட்டப்பட்டது. இங்கே குரு தனது சுயசரிதம் மற்றும் பிற நூல்களுக்கான பணியில் பல ஆண்டுகளைக் கழித்தார், மேலும் இன்றுவரை தொடரும் ஏகாந்தவாச நிகழ்ச்சிளைத் தொடங்கினார்.

அவர் பல செல்ப்ரியலைசேஷன் பெலோஷிப் ஆலயங்களையும் நிறுவினார், அங்கு எஸ் ஆர் எஃப் உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களான ஈடுபாடுள்ள அவையினரிடம் பெருமளவு வரிசைமுறையிலான ஆன்மீக விஷயங்களைப் பற்றி வழக்கமாகப் பேசினார்.

ஸ்ரீ ஸ்ரீ தயா மாதாவால் சுருக்கெழுத்தில் பதிவுசெய்யப்பட்ட இந்த உரைகள் “யோகானந்தரின் சொற்பொழிவுகள் மற்றும் கட்டுரைகளின் தொகுப்பு” என்று மூன்று பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளது.

யோகானந்தரின் வாழ்க்கை வரலாறு, ஒரு யோகியின் சுயசரிதம், 1946ல் வெளியிடப்பட்டது. மிக அதிக விற்பனையாகும் இப்புத்தகம் முதன்முதலில் வெளியிடப்பட்டதில் இருந்து தொடர்ச்சியான வெளியீட்டில் உள்ளது மற்றும் 50 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது ஒரு நவீன ஆன்மீக இலக்கியமாக பரவலாகக் கருதப்படுகிறது.

பரமஹம்ஸ யோகானந்தரின் இறுதி ஆண்டுகள் பெரும்பாலும் தனிமையில் கழிந்தன, ஏனெனில் அவர் பகவத் கீதை மற்றும் நான்கு நடத்தை விதிகளில் உள்ள இயேசு கிறிஸ்துவின் போதனைகள் பற்றிய மிகப்பெரிய விளக்க உரைகள், மற்றும் விஸ்பர்ஸ் ஃப்ரம் இடர்னிடி மற்றும் யோகதா சத்சங்கப் பாடங்கள் போன்ற முந்தைய படைப்புகளின் திருத்தங்கள் உட்பட தன் எழுத்துப் படைப்புகளை நிறைவு செய்ய தீவிரமாகப் பணியாற்றினார்.


அவர் ஸ்ரீ ஸ்ரீ தயா மாதா, ஸ்ரீ ஸ்ரீ மிருணாளினி மாதா மற்றும் அவரது நெருங்கிய சீடர்களில் சிலருடன் விரிவாகப் பணியாற்றி, அவர் மறைந்த பிறகு அவரது உலகளாவிய பணிகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஏதுவாக, அவர்களுக்கு ஆன்மீக மற்றும் அமைப்பு ரீதியான வழிகாட்டுதல்களை வழங்கினார்.

“எனது உடல் மறைந்துவிடும், ஆனால் எனது பணி தொடர்ந்து நடைபெறும். மேலும் எனது ஆன்மா வாழ்ந்து கொண்டிருக்கும். நான் மறைந்துவிட்ட பிறகும் கூட இறைவனது செய்தியுடன் உலகினை மீட்பதற்காக உங்கள் அனைவருடனும் சேர்ந்து நான் பணியாற்றுவேன்.

யோகானந்தர் 1952 மார்ச் 7

அன்று, இந்த மகத்தான குரு மகா சமாதி அடைந்தார். இந்தியத் தூதர் டாக்டர் பினய் ஆர். சென் அவர்களை கௌரவிப்பதற்காக கொடுக்கப்பட்ட விருந்தில் அவர் ஒரு குறுகிய உரையை அப்பொழுதுதான் முடித்திருந்தார்.

அவர்முன் 700 பேர் இருந்தனர். அமெரிக்காவில், போஸ்டன் நகரில், அவர் மஹாசமாதி அடைந்தார். தான் உடலை விடும் முன்பே, 'நான் உடலை விடப்போகிறேன்' என்று அவர் அறிவித்திருந்ததால், விஞ்ஞானிகள், மருத்துவர்கள் என பலரும் அங்கே வந்து அமர்ந்திருந்தனர்.



வந்தவர்களுடன் சிறிது நேரம் பேசியிருந்துவிட்டு, 'இப்போது என் உடலை நான் விடப்போகிறேன்' என்று சொல்லி, பத்மாசனத்தில் அமர்ந்து, தன் உடலை நீத்தார். மருத்துவர்கள் எத்தனை சோதனை செய்தாலும் அவர்களுக்கு புலப்படாத ஒரு விஷயமிது. ஏனெனில், மருத்துவ அறிவியலைப் பொருத்தவரை, உடலில் ஏதேனும் சிதைவு ஏற்பட்டு, உடல் இயங்க முடியாத நிலையில் மட்டுமே உயிர் பிரியும் என்று நம்பப்படுகிறது.

அவரது மறைவு ஓர் அசாதாரண நிகழ்வால் குறிக்கப்பட்டது. ஃபாரஸ்ட் லான் மெமோரியல்பார்க் இயக்குனர் கையெழுத்திட்ட ஒரு பிரமாணக் கடிதம் சாட்சியம் அளித்தது: "இறந்து இருபது நாட்களுக்குப் பிறகும்கூட அவரது உடலில் எந்தவிதமான உடல் சிதைவும் காணப்படவில்லை.

ஓர் உடல் இங்ஙனம் பூரண பதனநிலையில் இருப்பது, எங்களுக்குத் தெரிந்தவரையில் இந்த அமரர் அறையின் சரித்திரக் குறிப்புகளில் இதுவரை காணப்படாத ஈடுஇணையற்ற ஒரு சம்பவமாகும்."

கடந்த காலங்களில், பரமஹம்ஸ யோகானந்தரின் குரு ஸ்வாமி ஸ்ரீயுக்தேஸ்வரர், அவரை தெய்வீக அன்பின் அவதாரம் என்று குறிப்பிட்டிருந்தார். பின்னர், அவரது சீடரும் முதல் ஆன்மீக வாரிசுமான ராஜரிஷி ஜனகானந்தர் அவருக்கு பிரேமாவதாரம் அல்லது "தெய்வீக அன்பின் அவதாரம்" என்ற பட்டத்தைப் பொருத்தமாகச் சூட்டினார்.

பரமஹம்ஸ யோகானந்தருடைய மறைவின் இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, மனிதகுலத்தின் ஆன்மீக மேம்பாட்டிற்கு அவர் அளித்த தொலைநோக்குடனான பங்களிப்புகளுக்கு இந்திய அரசு முறையான அங்கீகாரம் வழங்கியது. அவரது நினைவாக ஒரு சிறப்பு நினைவுத் தபால்தலை வெளியிடப்பட்டது.

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG. REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

ஸ்ரீ குரு தத்த பாதுகா சேத்திரம்



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தில் உள்ள மாருதிபுரம் என்ற மருதம் கிராமத்தில் குருமார்களின் கிருபையாலும், அன்புச் சகோதரி திருமதி மஞ்சரி மகேஷ்பாபு அவர்களின் வைராக்கியத்தாலும் ஸ்ரீ குரு தத்த பாதுகா ஷேத்திர இராஜிதம் ஆலய குடமுழுக்குப் பெருவிழா கடந்த 9.6.22 வியாழன் அன்றுகாலை 9 to 10 மணிக்கு வெகு சிறப்பாக நடந்தேறியது.

முதல் நாளில் இருந்து யாக சாலை பூஜைகளும், சாஸ்திர சம்பிர தாயங்களும், ஸ்ரீ குரு ஸ்ரீ மாதா ஸ்ரீ பாலானந்தா சுவாமிகளின் தலைமை யில் வெகு சிறப்பாக நிகழ்த்தப்பட்டது.

காலை 9 மணிக்கு யாகசாலையில் வைக்கப்பட்ட புனித கலசநீர் கோபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு வேத கோசங்கள் முழுங்க குடமுழுக்கு செய்யப்பட்டது. குடமுழுக்குப் பெருவிழாவில் பக்தர்களும், ஊர் மக்களும், பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

ஆலயத்தின் கீழ் பகுதியில் ஸ்ரீ சுவாமி சமர்த்த மகராஜின் பாதுகைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு தியானம் செய்வதற்குண்டான அமைதியான சூழல் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது.

மேல் பகுதியில், சீரடி சாய்பாபா, ஸ்ரீ அக்கல்கோட் மகராஜ் சுவாமி ஸ்ரீ சமர்த்தர் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி ஆகியோரின் திருவுருவச் சிலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. பளிங்கு கல்லில் குரு மகராஜ் மூவரும் அற்புதமாக வடிவமைக்கப்பட்டு பக்தர்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டி ருக்கின்றார்கள்.

விழாவிற்கு வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை ஸ்ரீ குரு தத்த பாதுகா சேத்திர நிர்வா கிகள் மிகச்சிறப்பாக செய்திருந்தார்கள்.

காஞ்சிபுரம் செல்லும் பக்தர்கள் அவசியம் ஸ்ரீ குரு தத்த பாதுகா









சேத்திரம் சென்று குருவருளை பெற்று வாழ்வில் சகல நலன்களும் பெற்று உய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றோம்.

இல்லறத்தில் இருக்கும் ஓர் சாதாரண குடும்பத்தலைவி இப்படி ஓர் ஆலயத்தை குறுகிய காலத்திற்குள் எழுப்ப முடியுமா? என்ற கேள்விக்கு ஒரே பதில்தான். முடியும். எப்படி?

"எவர் ஒருவர் தன்னை, கட வுளுக்கு வேலைக்காரனாக எண்ணிக் கொள்கின்றார்களோ அவர்களது காரியங்கள் விக்கினங்கள் இல்லாது நிறைவேறும்".

<u>ஆலய நிர்வாகி,</u>

திருமதி. மஞ்சரி மகேஷ் பாபு

செல்: ***99409 41049, 70106 26417***

<u>ஆலய முகவரி:</u>

ஸ்ரீ குரு தத்த பாதுகா சேத்திர இராஜ்யம், மாருதிபுரம் கிராமம்.

திருப்புலிவனம்,

உத்திரமேரூர் வட்டம்,

காஞ்சிபுரம் மாவட்டம்.

நோய் நீக்கும் அன்னதானம்



நீங்கள் எந்த இனமாகவும் இருக்கலாம், எந்த மொழி பேசுபவராகவும் இருக்கலாம், எந்த சாதி, மதமாகவும் இருக்கலாம். அவ்வளவு ஏன், யானை போன்ற பெரிய மிருகங்களில் இருந்து கொசுவை போன்ற சிறிய உயிரினங்கள் வரை அனைத்திற்கும் முதலில் வருகின்ற பொதுவான ஒரே உணர்வு பசி.

எனவே நீங்கள் அன்னதானம் செய்ய வேண்டும் என்று நினைத்தீர்கள் என்றால், அதற்கு மட்டும் சாதி, மதம், மொழி, இனம், மனிதன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், மிருகம் என்று பாகுபாடு பார்க்கத் தேவையில்லை என்று சங்கர கீதை கூறுகின்றது.

அதேபோன்று அன்னதானம் செய்வதற்கு நேரம் காலம் பார்க்கத் தேவை இல்லை என்றும் கூறுகின்றது.

ஒரு சிலர் இரவு பத்து மணிக்குமேல் அன்னதானம் செய்தால் அன்னலட்சுமி வீட்டை விட்டு போய்விடுவாள் என்று கூறுவார்கள். நீங்கள் எப்போது பசி என்று கேட்போருக்கு இல்லை என்று கூறினீர்களோ அப்போதே உங்கள் மனதை விட்டு அன்னலட்சுமி போய் விட்டாள். அதற்கப்புறம் உங்கள் வீட்டில் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன?

பசி என்பது எல்லா உயிர்களுக்கும் பொதுவானது. பசி என்ற உணர்வு அக்னியைப் போன்றது. எப்பொழுது ஓர் உயிர் பசியால் துடிக்கின்றதோ அப்பொழுதே அதன் வயிறு என்ற யாக குண்டம் எரிய ஆரம்பிக்கின்றது.

அதில் உடனடியாக யாக பொருட்கள் என்ற உணவினை இடவேண்டும் அப்பொழுதுதான் உணவினை உண்ட அக்னி சாந்தியடையும். இதுவே யாகத்தின் பலனும், அன்னதானத்தின் பலனுமாகும்.

இன்னும் ஒரு படி மேலே நின்று ஞானமார்க்கத்தின்படி கூறுவதென்றால் அன்னதானமே உண்மையான ஹோமம் ஆகும்.

சிலர் கூறுவதுபோன்று தொடர்ந்து அன்னதானம் செய்வதால் செல்வம் ஒன்றும் குறைந்து போகாது. மாறாக இறைக்கின்ற கேணிதான் ஊறும் என்பதற்கேற்ப, அன்னதானம் செய்வதற்குண்டான செல்வம் வந்து கொண்டே இருக்கும். இது அனுபவ உண்மை.

அக்காலத்தில் ஆயுர்வேத மருத்துவர்கள் நோய்க்கு மருந்தளித்து விட்டு, நோயாளியிடம் வாரத்திற்கு ஒரு முறை அன்னதானம் அளித்து வாருங்கள். நோய் விரைவில் குணமாகிவிடும் என்று கூறுவதுண்டு.

அதையே சங்கர கீதை அன்னதானம் செய்வோருக்கு பலன் உடனடியாகக் கிட்டும் என்றும், முக்கியமாக வியாதியையும், சோகத்தையும் போக்கும் என்று கூறுகின்றது.

எவர் ஒருவரின் கர்மா தீர்கின்றதோ அவரே அன்னதானம் செய்ய முடியும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. உங்களின் கர்மா தீர்ந்துவிட்டதா என்பதை அறிய நீங்களும் அன்னதானம் செய்து பாருங்கள். உங்களால் தொடர்ந்து செய்யமுடியவில்லை என்றால், தொடர்ந்து மிகச்சரியாக யார் அன்னதானத்தை செய்து வருகின்றார்களோ அவர்களுக்கு உங்களால் ஆன உதவியை செய்து வாருங்கள்.

அப்படி ஏதேனும் ஒரு வகையில் உங்களால் தொடர்ந்து பிறருக்கு உதவி செய்ய முடிகின்றது என்றால் உங்கள் கர்மா தீர்ந்துவிட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

தொடர்ந்து அன்னதானம் செய்து உங்கள் பிறவியை புனிதப் பிறவியாக மாற்றிக் கொள்ளுங்கள். பல ஆலயங்களிலும், பல மடங்களிலும் தொடர்ந்து அன்னதானத்திற்கு முக்கியத்துவம் அளித்து வருவது நாம் அறிந்ததே!

பகவான் சாயிநாதரும் பசித்தவனுக்கு முதலில் பசியைப் போக்கு என்று கூறியதோடு மட்டுமல்லாது தன்னை நாடி வந்த பக்தனுக்கு தன் கையாலேயே உணவு சமைத்த அன்னதானம் செய்தார். என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம் என்று மொழிந்தார்

வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடிய வள்ளல் பெருமானார். பசிபிணி போக்குவதன் பெருமையை உலகிற்கு உணர்த்தி இன்று வரை அந்த தர்மத்தை நிலைநாட்டியிருக்கின்றார். அது இந்த உலகு உள்ளவரை நிலைத்திருக்கும் என்பதில் அய்யமில்லை.

கடந்த ஐந்து ஆண்டுகளாக நமது இதழின் ஆசிரியர் திரு. ஸ்ரீராம் சாய் அவர்கள் வாரந்தோறும் வியாழன் அன்று இல்லாதவர்களுக்கும், இயலாதவர்களுக்கும் அவர்கள் இருக்கும் இடத்திற்கே தேடிச் சென்று 150 நபர்களுக்கு அன்னம் அளித்து வரும் சேவையை பகவான் சாயிநாதரின் கட்டளைக் கிணங்க தொடர்ந்து செய்து வருகின்றார்.

மனிதனுக்கு மட்டும் அல்ல, வாயில்லா ஜீவன்களுக்கு கொடுக்கும் தானமும் அன்னதானமே! வாயில்லா ஜீவன்களுக்கு நாம் கொடுக்கும் அன்னதானம் நன்மைகள்



மிகுந்த புண்ணியத்தையும் சேர்த்து அதீத பலன்களை கொடுக்கும்!

அதிகாலையில் எழுந்து புறா, கிளி போன்ற பறவை இனங்களுக்கு கம்பு, கேழ்வரகு, திணை, அரிசி, கோதுமை போன்ற தானியங்களை தானம் கொடுத்து கூடவே தண்ணீரையும் வைக்கலாம்.

பசுக்களுக்கு வாழைப்பழம், பச்சரிசி, வெல்லம், அகத்திக்கீரை போன்றவற்றை தானம் கொடுக்கலாம்

பைரவரின் அம்சமாக விளங்கும் நாய்களுக்கு உணவு தானம் செய்யலாம்.

எப்போதாவது, எங்கேயாவது, யாருக்காவது தினந்தோறும் ஒருவருக் காவது அன்னதானம் செய்யுங்கள். முடியாதபோது ஒரு கைபிடி அரிசியோ, சர்க்கரையோ எடுத்து உங்கள் வீட்டின் மூலையில் போட்டு வைய்யுங்கள். நூற்றுக்கணக்கான உயிரினங்களின் பசியை போக்கிய புண்ணியம் பெறுவீர்கள்.

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

வாழ்வளிக்கும் வல்லாரை

ஆறு, வாய்க்கால், குளம், ஏரியின் ஓரங்களில் தானாகவே வளர்கிறது. வல்லாரைக் கீரை. படர்கொடி, போல் வளரும். வல்லாரையின் தாயகம், இந்தியா. இது செடி வகையைச் சேர்ந்தது.

இந்தியா முழுவதும் பயிராகும் இக்கீரை இரண்டாயிரம் மீட்டர் உயரமான மலைப்பகுதிகளிலும் கூடத் தானாகவே வளரும் தன்மை கொண்டது.

பறித்த புதிய வல்லாரைக் கீரையில் வெல்லாரைன் (Vellarine) என்னும் எண்ணெய்ப் பொருள் இருக்கிறது. அதனால் தான் இந்தக் கீரை மிகுந்த நறு மணத்தை உணவுக்கு ஊட்டுகிறது.

உலர்ந்த கீரையில் இந்த நறுமணம் மறைந்துவிடுகிறது. ஆனாலும் கீரையின் மருத்துவக் குணங்கள் அழியாமல் உலர்ந்த கீரையிலும், கீரைப் பொடியிலும் அப்படியே கிடைக்கிறது.


வல்லாரையில் கொழுப்பு எண்ணெய் சிட்டோஸ்டிரோல், டானின், ஒரு வகை மரப்பசை போன்ற பொருள்கள் உள்ளன. உலர்ந்த செடியில் காடிப்பொருளும், ஹைடிரோ கோட்டிலைன் என்னும் பொருளும் உள்ளன.

கீரையிலும் வேரிலும் வெல்லாரைன், பெக்டிக் அமிலம், நீரில் கரையாத மரப்பிசின் போன்றவை இருப்பதால் கசப்புச் சுவை அதிகம் இருப்பது போல் உணருகிறோம். கீரை மட்டும் இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, புளிப்பு ஆகிய சுவைகள் கொண்டுள்ளது.

வல்லாரைக்கீரை மிகுந்த சத்துணவு நிரம்பியது. அத்துடன் அது எளிதில் உணவை வயிற்றுக்குள் கொண்டு சென்று செரிக்கச் செய்துவிடுகிறது. உணவுப் பொருள்களையும் நன்கு உறிஞ்சிக்கொண்டு, கழிவு பொருட்களை உடனே வெளியேற்றி உடலை பழையபடி ஆரோக்கியமான நிலைக்கு கொண்டு வந்து விடுகிறது.

அதனால்தான் எல்லாவகையான காய்ச்சல்களுக்கும் இதன் இலை, துளசியிலை, மிளகை ஒன்றாகச் சேர்த்துக் கொடுக்கிறார்கள். காலை, மாலை என இருவேளை கொடுத்தால் காய்ச்சல் தணியும், இலையாகக் கிடைக்காதவர்கள் தலா அரை





தேக்கரண்டி வீதம் வல்லாரைக் கீரைப்பொடி, துளசி இலைப் பொடி, கால் தேக்கரண்டி மிளகுப்பொடி சேர்த்துச் சாப்பிடலாம். இதை ஒரு வேளை சாப்பிட வேண்டும்.

இக்கீரையைச் சாதாரணமாய்ப் பருப்பு சேர்த்துச் சமைத்துச் சாப் பிட்டால், இது உடலில் உள்ள வீக்கங்களுடன் போரிட்டுச் சமாதா னப்படுத்திவிடும். உள் உறுப்புகளில் உள்ள வீக்கங்களும் குணமாகிவிடும். ஓரளவு பேதி மருந்து போலவும் இது செயல்படுகிறது.

சிறு நீர் நன்கு சுரந்து உடனே வெளியேறவும் இக்கீரை பயன் படுகிறது. வாரம் ஒரு முறை உடல் உறுப்புகளைப் புதுப்பித்து க்கொள்ளவும். பல்வேறு விதமான நோய்க் கிருமிகள் அகலவும் இக்கீரையைச் சமைத்துச் சாப்பிடலாம்.

உலர்ந்த வல்லாரைக் கீரைப் பொடியில் ஒரு தேக்கரண்டியும் அதே அளவு நல்லெண்ணெயும் சேர்த்துச் சாதத்தில் பிசைந்து சாப்பிட லாம். இந்த முறையில் தினசரி பயன்படுத்தினாலும் ஞாபக சக்தியும் உடல் நலனும் பாதுகாக்கப்படும்.

இக்கீரையின் தண்டு, வேர், பூ என அனைத்தும் சிறந்த உணவாகவும், நன்கு குணப்படுத்தும் மருந்தாகவும் பயன்படுகின்றன. மேலை நாடுகளில் இந்தக் கீரையைச் சூப்பாக தயார் செய்து அருந்துகிறார்கள்.

100 கிராம் கீரையில் கிடைக்கும் கலோரி 37% ஆகும். இதில் ஈரப்பதம் 84.5%, புரதம் 2.1%, கொழுப்பு 0.5%, தாதுஉப்புகள் 2.7%, நார்சத்து 4.2%, மாவுச்சத்து 6.0% என்று உள்ளன. இத்துடன் 224 மில்லி கிராம் கால்சியமும், பாஸ்பரஸ் 32 மில்லி கிராமும், இரும்புச்சத்து 68.8 மில்லி கிராமும் உள்ளன. எனவே, உடல் வளர்ச்சி, மூளை வளர்ச்சி மற் றும் இரத்த சோகை குணமாக, இக்கீரை யைத் தவறாது வாரம் ஒரு முறை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

வல்லாரையில் நார்ச்சத்து அதிக மாய் இருப்பதால் கொலாஸ்டிரல் குறைக்கப்படும். மலச்சிக்கலும் உடனுக்குடன் குணப்படுத்தப்படும்.

வாய்ப்புண், வயிற்றுவலி, எக்ஸிமா என்னும் சொறி சிரங்கு, வயிற்றுப்புண் முதலியவற்றையும் இக்கீரை குணப்படுத்துகிறது. டி.பி. நோயால் ஏற்படும் இருமலையும் குணப்படுத்துகிறது.

சொறிசிரங்கு, வி.டி. நோய், கெட்டுப்போன இரத்தம், வயிறு தொடர்பான நோய்கள் முதலியவை குணமாக ஒரு டம்ளர் பசும் பாலில் ஒரு தேக்கரண்டி வல்லாரைக் கீரைப் பொடியும், ஒரு தேக்கரண்டி அதிமதுரமும் சேர்த்துக் கலந்து கொடுக்க வேண்டும். மிகச்சக்தி வாய்ந்த மருந்து இது. குணம் தெரிய ஆரம்பிக்கும் போது கீரைப்பொடி, அதிமதுரம் முதலியவற்றின் அளவைக் கொஞ்சம் கொஞ்சமாய் குறைத்துப்

பாலை அருந்த வேண்டும்.

வெட்டைச்சூடு குணமாகக் காலையில் வெறும் வயிற்றில் மிளகுப்பொடி சேர்த்து ஒரு தேக்கரண்டி வல்லாரைக் கீரைச் சாறு அருந்த வேண்டும்.

ஞாபக சக்தி அதிகரிக்கவும், மன நோய் குணமாகவும், மூளை நல்ல பலத்தைப் பெறவும், தலை முடி நன்கு வளரவும் ஒரு டம்ளர் பாலில் ஒரு தேக்கரண்டி அளவு இக்கீரைக் பொடியைக் கலந்து அருந்த வேண்டும். தினமும் ஒரு வேளை மட்டும் இந்த முறையில் அருந்தினால் போதும்.

மனநோயாளிகள் விரைந்து குணமாக வாரம் இருமுறை மட்டும் இக்கீரையைச் சமைத்துப் பரிமாறலாம். காசநோய்க்காரர்களுக்கு ஏற்படும் தொண் டைக்கட்டு, தொண்டைக்கம்மல் முதலியவை இக்கீரையை உண்டால் குணமாகும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் சீதபேதி உடனே குணமாக நான்கு இலைகள், சீரகம், சர்க்கரை சேர்த்து துவையலாக அரைத்துப் பயன்படுத்த வேண்டும். இது மிகச்சக்தி வாய்ந்த உணவு மருந்தாகும். இந்தத்துவையலை கொப்பூழ் பகுதியைச் சுற்றித்தடவ வேண்டும், உணவாகவும் கொடுக்க வேண்டும்.

தோல், நரம்பு, இரத்தம் சம்பந்தப் பட்ட நோய்கள் குணமாக இக்கீரையைப் பொடியாகத் தினமும் பாலுடன் சேர்த்துப் பயன்படுத்தலாம். பலவீனம் அடைந்த நரம்புகளைப் புதுப்பிக்க அரை தேக்கரண்டி வீதம் தண்ணீரில் கலந்து தினமும் மூன்று வேளை அருந்த வேண்டும. முதல் நாள் மட்டுந்தான் அரை டீஸ்பூன். மறுநாளிலிருந்து அளவைக் குறைத்துக்கொண்டே வந்து ஒரு சிட்டிகை வரை பயன்படுத்தலாம். குழந்தைகளுக்கு என்றால் ஒரு சிட்டிகையே போதும்.

இக்கீரையின் செடி, தண்டு, கீரை முதலியவற்றலிருந்து சாறு எடுத்து, யானைக்கால் வியாதியுள்ள பகுதிகளில் தடவினால் நாளடைவில் குணமாகும். அல்லது பறித்த கீரைகளை வேகவைத்துத் துணியில் கட்டிச் சூட்டுடன் குறிப்பிட்ட இடங்களில் ஒத்தடம் கொடுக்கலாம்.

இக்கீரைப் பொடித் தூளை நாட்பட்ட புண்கள் மீது தூவினால் குணமாகும். மேகப்புண் மற்றும் சொறி சிரங்குகளின் மீது இது போலவே தூவ வேண்டும்.

பல்லில் படிந்துள்ள மஞ்சள் நிறம் அகல இந்தக் கீரையால் பல் துலக்கலாம். நிறம் மாறி பற்களும் வெண்மையாகிவிடும்.

கொப்புளங்கள் குணமாக இலைச் சாறுடன் கருஞ்சீரகம் நெய் ஆகியன சேர்த்துப் பூச வேண்டும்.

ஆரோக்கியத்துடன் உடல் உறுதி பெற வல்லாரைக் கீரையையும், கீரைப்பொடியையும் வாரத்திற்கு ஒரு முறை என அளவுடன் பயன்படுத்தி, நலம் பெறுங்கள்.

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,
17/7 **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:
S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன். அண்ணாநகர். ரூ.3000.

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம். ரூ.2000.

திருமதி.சுகன்யா. சென்னை.ரூ.1000.

திரு. சக்தி. அந்தியூர். ரூ 1000.

திரு.இராஜசேகர். குரோம் பேட்டை ரூ.1000.

திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.800

திரு. கேஸ்வர். ஈரோடு.ரூ.500.

திருமதி.சாந்தி. மந்தைவெளி.ரூ.500.

திரு.சின்னதுரை.குரோம்பேட்டை. ரூ.500.

திருமதி. பானுமதி பாண்டி. மதுரை. ரூ.500.

திருமதி.லோகேஸ்வரி கார்த்திக். மதுரை. ரூ.500.

திருமதி.பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.

திரு.பி.ராமசந்திரன் வில்லிலாக்கம். ரூ.380.

திரு.பத்ரி நாராயணன். நெய்வேலி. ரூ.300

திரு.சாந்தமூர்த்தி. போரூர். ரூ.300.

திரு.சி.டி. ரமேஷ். பெரியார் நகர். ரூ.300

திருமதி.லதாபாபு, வேப்பம்பட்டு. ரூ.200

திரு.கே.ராமமூர்த்தி. ஓய்வு.அசோக் லேலண்ட். கொளத்தூர்.ரூ.200.

திருமதி பிச்சையம்மாள்.பெரம்பூர். ரூ.100.

திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.

திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100.

திருமதி. உமாசக்திவேல்.AYK.ரூ.100.

திருமதி. வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.100.

சிவா அரிசி மளிகை ரூ.50.

பெரியார் நகர் பாபா
பக்தர்கள் - ரூ.50

திரு.அகஸ்டின் குடும்பத்தார்.
குன்றத்தூர். அரிசி 1 மூட்டை

திரு.குமரன் ஸ்டோர் - டிராவல்ஸ்,
பெரியார் நகர் - ரூ.200



என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 150 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 1,500 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் முலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு.பாபு கி.ணி மின்சார வாரியம். அயனாவரம். ரூ.1000.
திரு. சம்பத் சாய். வில்லிவாக்கம்.ரூ.500
திருமதி.ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர்.ரூ.200..
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர். ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/ மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.